# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

**No. 29A** **CHENNAI, WEDNESDAY, JULY 27, 2005**

**Aadi 11, Parthiba, Thiruvalluvar Aandu - 2036**


## Part VI --- Section 2
**(Supplement)**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
**தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

### Notification No. TNERC/SC/7/1 Dated 21.07.2004

மின்சாரச் சட்டம் 2003 (2003 ஆம் ஆண்டின் 36 வது மையச் சட்டம்) இல் கூறப்படுவதாவது, மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம், மின்கட்டணம் வசூல் செய்தல், மின்கட்டணப் பட்டியலிடுவதற்கான கால இடைவெளி, கட்டணஞ் செலுத்தாத மின் வழங்கலைத் துண்டித்தல், அதை மீள இணைத்தல், மின் எந்திரங்களுக்கும், மின் தொடர்களுக்கும், மின்னளவிகளுக்கும் ஏற்படுத்தும் சிதைவு அல்லது இடுக்கண் (distress) அல்லது அமைப்புக்குலைவு (tampering) ஏற்படுத்தல், உரிமதாரரோ அல்லது அவர் சார்பாகச் செயல்படுபவரோ மின் வழங்கலை துண்டிக்கவும் மின் தொடர்களையோ, மின் எந்திரங்களையோ, மின்னளவிகளையோ பதிலீடு செய்யவோ, மாற்றவோ அல்லது அவற்றில் பேணுதல் பணிகள் செய்யவோ நுழைதல் போன்றவற்றுக்கான தரக்குறிப்புகள் கொண்ட மின்சார வழங்கல் விதித்தொகுப்பை உருவாக்கும் அதிகாரம் உடையது என்பதாம்.

மேலும் அதில் குறிப்பிடுவதாவது, அப்படி உருவாக்கப்படும், பிறவற்றுடன் கூடிய ஒழுங்குமுறைவிதிகளில் ஒன்றான மின்சார வழங்கல் விதித்தொகுப்பு நடைமுறைக்கு வருமுன்பே வெளியிடப்பட வேண்டும் என்பதாம். எனவே, அதன்படி இந்த முன் வெளியீடு வெளியிடப்படலாகிறது.

எனவே, இப்போது மின்சாரச் சட்டம் 2003, சட்டப்பிரிவு 50 இன்படியும் மேலுமதன் சட்டப்பிரிவு 180 இன் படியும் அவற்றின் சார்பில் இயலும் அனைத்து அதிகாரங்களின் படியும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இவ்விடத்தே கீழ்வரும் விதித்தொகுப்பின் தரக்குறிப்பை அளிக்கிறது.

### அத்தியாயம் 1 – முதனிலை

**1. சிறுதலைப்பும் தொடக்கமும்**

1. இந்த விதித்தொகுப்பு தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு என அழைக்கப்படும்.

2. இது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் அதிகாரம் பெறுகிறது.

## 2. வரையறைகள்

வேறுவகைப்பட்ட சூழ்நிலையின் குறுக்கீடு இல்லாத வரையில் இந்த விதித்தொகுப்பில்

a) சட்டம் என்பது மின்சாரச் சட்டம் 2003 (மையச் சட்டம் 2003 ல் 36 ) என்பதைக் குறிக்கும்.

b) "விதித்தொகுப்பு" என்பது "தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு" என்பதைக் குறிக்கும்.

c) ஆணையம் என்பது "தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்" என்பதைக் குறிக்கும்.

d) "இணைந்துள்ள சுமை" (connected load) என்பது நுகர்வாளரின் நிறுவன அமைப்பில் உள்ள அனைத்துச் சாதனங்கள், அனைத்து நடமாடும் சாதனங்கள், செய்யப்படும் விளை பொருள்களின் மீது சோதனை செய்யத் தேவைப்படும் மின் திறன் வாயில் (power source) மற்றும் பழுது பார்க்கப்பட்ட சாதனங்கள் ஆகியவற்றினுடைய வரையளவுகளின் தொகு மொத்தம் என்பதைக் குறிக்கும்.

### விளக்கம்

வரையளவுகள் கி.வோ.ஆ (KVA) அளவீட்டில் இருந்தால், அதை கி.வா. (KW) அளவிற்கு மாற்ற 0.9 என்ற மின் திறன் காரணியால் (power factor) பெருக்கப்படும். ப.தி (பரிதிறன் – HP) என்ற அளவீட்டில் இருந்தால் 0.746 என்ற காரணியால் (factor) பெருக்கப்பட்டு கி.வா க்கு மாற்றப்படும்.

e) 'ஒப்பந்தம் பெற்ற சுமை' (contracted load) என்பது மின்சாரம் வழங்கும் தொழிலில் ஈடுபட்ட உரிமதாரருக்கும் நுகர்வோருக்கும் இடையிலான இசைவுப் பத்திரத்தில் (Agreement) குறிப்பிடப்படும் சுமையைக் குறிப்பிடும்.

f) "ஒப்பந்தம் பெற்ற மின் தேவை" என்பது நுகர்வோருக்கும் அவருக்கு மின்சாரம் தரும் தொழில் செய்யும் உரிமதாரருக்கும் இடையிலான இசைவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மின் தேவையைக் குறிப்பிடும்.

g) "நுகர்வோர்" என்பது இந்தச் சட்டத்தின்படியோ நடப்பில் உள்ள வேறு சட்டத்தின்படியோ, பொது மக்களுக்கு மின்சாரம் வழங்கும் தொழிலில் ஈடுபட்ட உரிமதாரராலோ அல்லது அரசாலோ அல்லது வேறு எவராலோ தனது சொந்தப் பயன்பாட்டுக்காக மின்சாரம் பெறும் எந்தவொரு தனி ஆளையும் குறிப்பிடும். மேலும் அது நிகழ்விற்கேற்ப (as the case may be) உரிமதாரர் அரசு அல்லது அது போன்ற வேறொரு தனி ஆளினுடைய பணியமைப்புகளிலிருந்து மின்சாரம் பெறும் நோக்கத்திற்காக அப்போதைக்கு இணைக்கப்பட்ட உறைவிடத்தின் எந்தவொரு தனியாளையும் உள்ளடக்கும்.

h) "நுகர்வோர் மின்னளவி அட்டை" என்பது நுகர்ந்த மின்சாரம் சார்ந்த அளவீடுகளையும் நுகர்ந்த மின்சாரத்துக்கான கட்டணம் மற்றும் அதோடு சார்புள்ள பிற கட்டணங்களையும் பதிவு செய்வதற்காக நுகர்வோரின் உறைவிடத்தில் அமைந்த தாழ் மின்னழுத்த அமைப்பில் வைக்கப்பட்ட அட்டையைக் குறிப்பிடும். மேலும் அது நுகர்வோர் கட்டணங்களைச் செலுத்த வேண்டி காலக் கெடு நாட்களையும் அப்படிக் கட்டாதபோது மின்சாரம் துண்டிக்க நேரும் கால இடைவெளியையும் தெரிவிக்கும் முன்னெச்சரிப்பு அறிக்கை தரும் நோக்கத்திற்கும் பயன்படுகிறது.

i) "பொறியாளர்" என்பது உரிமதாரால் அமர்த்தப்பட்ட, ஆணையம் வகுத்த தகுதிகள் உடைய குறிப்பிட்ட கள மின்வழங்கலுக்குப் பொறுப்பேற்றுள்ள, பதவிப் பெயர் எதுவாக இருந்தாலும், பொறியாளரைக் குறிப்பிடும். மேலும் இது இந்த விதித் தொகுப்பின்படியான அதிகாரத்தை நடைமுறைப்படுத்த அவராலோ அவரது மேலதிகாரிகளாலோ அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு தனியாளையும் உள்ளடக்கும்.

j) "அதி உயர் அழுத்த (அ.உ.அ) நுகர்வோர்" என்பது உரிமதாரரிடமிருந்து அதி உயர் அழுத்த மின்னமைப்பில் மின்சாரம் வழங்கப்பெறும் நுகர்வோரைக் குறிப்பிடும்.

k) "உயர் அழுத்த (உ.அ) நுகர்வோர்" என்பது உரிமதாரரிடமிருந்து உயர் அழுத்த மின்னமைப்பில் மின்சாரம் வழங்கப்பெறும் நுகர்வோரைக் குறிப்பிடும்.

l) "தாழ் அழுத்த (தா.அ) நுகர்வோர்" என்பது உரிமதாரரிடமிருந்து தாழ் அல்லது மித அழுத்த மின்னமைப்பில் மின்சாரம் வழங்கப்பெறும் நுகர்வோரைக் குறிப்பிடும்.

m) "சுமை" (Load) என்பது நிகழ்விற்கேற்ப இணைந்துள்ள சுமையையோ ஒப்பந்தம் பெற்ற சுமையையோ குறிப்பிடும்.

n) "சுமைக்காரணி" (Load factor) என்பது கிலோவாட்டில் உள்ள அம்மாதச் சராசரி தேவைக்கும் கிலோவாட்டில் உள்ள அம்மாதப் பெருமத் (maximum) தேவைக்கும் உள்ள விகிதத்தைக் (ratio) குறிப்பிடும். இத் தேவை மூன்று இலக்க தசமங்களுக்கு கணக்கிடப்பட்டு பிறகு இரண்டு இலக்க தசமங்களுக்குச் சீர் செய்யப்பட (rounded off) வேண்டும்.

o) "மாதம்" என்பது, குறிப்பிட்ட சூழலில் வேறு பொருள் தேவைப் படாதவரை, பிரிட்டனின் கால அட்டவணைப் படியான மாதத்தைக் குறிப்பிடும், பட்டியலிடலையும் கட்டணம் செலுத்தலையும் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்குரிய மின்னளவியின் அளவை எடுத்த நாளுக்கும், அந்நிகழ்வில் தேவைப்பட்டபடி, அதற்கு முந்தைய அல்லது பிந்தைய மாதத்துக்குரிய மின்னளவியின் அளவை எடுத்த, எடுக்கப்போகிற நாளுக்கும் இடையிலான கால இடைவெளியைக் குறிப்பிடும்.

p) "உறைவோர்" என்பது மின்சாரம் பயன்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் உறைவிடத்தில் வாழும் தனியாளைக் (உறைவிடச் சொந்தக் காரரோ அல்லது அப்படியல்லாதவரோ) குறிப்பிடும்.

q) "திறன் காரணி" என்பது மெய்த் திறனுக்கும் அதன் தோற்றத் திறனுக்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கும். சராசரி திறன் காரணி என்பது பட்டியலிடும் மாதத்திற்குரிய கிலோ வாட் மணிகளுக்கும், கிலோவாட் ஆம்பியர்களுக்கும் உள்ள விகிதத்தைக் குறிப்பிடும்.

r) "மாநில மின் செலுத்தப் பணிநிறுவனம்" (State Transmission Utility) என்பது மாநில அரசால் வரன்முறைப்படுத்தப்பட்ட அரசு குழுமத்தையோ (company) அல்லது வாரியத்தையோ குறிப்பிடும்.

s) "மின் வழங்கல்" என்பது உரிமைதாரருக்கோ நுகர்வோருக்கோ விற்கப்படும் மின்சாரத்தைக் குறிப்பிடும்.

இந்த விதித்தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது பொது வாக்கியப்பிரிவுகள் (General clause) சட்டம் 1897 இலோ (1897 ஆண்டின் 10 வது மையச்சட்டம்) பயன்படுத்தப்படாத சொற்களும் வாக்கியங்களும் நடப்பில் அமைந்த பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களைக் குறிப்பிடும்.

## அத்தியாயம் – 2

### மின்கட்டணப் பட்டியலிடலும் வசூலித்தலும்

**3. மின் வழங்கல் வகைகள்**

நுகர்வோர்களுக்கு மின் வழங்கல் கீழுள்ள வகைகளில் கிடைக்கும்:

a) 4000 வாட் அளவுக்கு மிகாத மொத்த இணைந்துள்ள சுமைகளுக்கு 2 கம்பிகளும், தறுவாய் நொதுமல் இடையில் 240 வோல்ட்டுகளும் அமைந்த ஒற்றைத் தறுவாய் (single phase) அமைப்பில் மின் வழங்கல் கிடைக்கும் (திறன் காரணி உட்பட).

b) 4000 வாட் அளவுக்கு கூடுதலான மொத்த இணைந்துள்ள சுமையும் 112 கிலோவாட் அளவுக்கு மிகாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு, 4 கம்பிகளும் தறுவாய்களுக்கிடையில் 415 வோல்ட்டுகளும் தறுவாய்–நொதுமல் இடையில் 240 வோல்ட்டுகளும் அமைந்த முத்தறுவாய் (three phase) அமைப்பில் மின் வழங்கல் கிடைக்கும்.

c) இணைந்துள்ள சுமை 4000 வாட் அளவுக்கு மிகாத போது, மேற்கூறிய இருவகை அமைப்புகளில் எதை வேண்டுமானாலும் நுகர்வோர்கள் தேர்ந்தெடுக்கலாம்.

d) சிறும மின்தேவை 63 கி.வோ.ஆ அளவுக் குறையாத ஆனால் 112 கி.வா / 150 ப.தி அளவுக்கும் அதிகமாக மின் தேவையுடைய திறன் நிறுவன அமைப்புகளுக்கு, 3 கம்பிகளும் தறுவாய்களுக்கிடையில் 11,000 வோல்ட்டுகளோ அல்லது அதற்கும் அதிகமான மின்னமுத்தமோ உள்ள முத்தறுவாய் அமைப்பில் மின்வழங்கல் கிடைக்கும்.

e) மின் தேவை 5 மெ.வோ.ஆ அளவுக்கோ அல்லது அதற்கும் அதிகமாகவோ உள்ளபோது 33 கி.வோ அல்லது அதற்கும் அதிகமான மின்னழுத்தத்தில் நுகர்வோர்கள் மின் வழங்கலைப் பெறலாம்.

## 4. உரிமதாரர் வசூலிக்கக் கூடிய கட்டணங்கள்

நுகர்வோர்களிடமிருந்து உரிமதாரர் வசூலிக்கக் கூடிய கட்டணங்களாவன:

### 1) மின்கட்டண வீதம் சார்ந்த கட்டணம்

i) உ.அ. மின்வழங்கல் தா.அ. மின்வழங்கல், தற்காலிக மின் வழங்கல் மற்றும் பல்வேறு வகை மின் வழங்கல் பெறும் நுகர்வோர்களுக்கு அவ்வப்போது ஆணையம் விதிக்கும் கட்டண வீதங்களின்படி, உரிமதாரரால் அவர்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்துக்கான விலை கணக்கிடப்படும். உறைவதற்காகக் கட்டப்பட்ட வீட்டுக் கட்டிடங்கள், அடுக்கு வீடுகள் போன்றவற்றுக்கான கட்டணவீதம், அவை கட்டி முடிக்கப்பட்டு உரிய கட்டண வீதத்துக்கு மாற்றப்படும் வரையில், வணிகக் கட்டண வீதத்தில் அமையும் . நிலைத்த மின் வழங்கல் ஏற்கனவே தரப்பட்டுள்ள வீடுகளில் பயன்படும் தரைமெருகிடும் சாதனங்கள், பற்றுவைப்புச் சாதனங்கள் மற்றும் பிற நடமாடும் சாதனங்கள் ஆகியவற்றுக்கு, அக்கட்டிடங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பேணுதல் பணிகளுக்காகத் தற்காலிகமாகப் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்தைக் கணக்கிட, அது தற்காலிக மின்வழங்கல் வீதத்தில் கருதப்படாமல், அக்கட்டிடத்தில் உள்ள நிலைத்த மின் கட்டண வீதத்திலேயே நுகர்ந்ததாகக் கருதப்படும்.

ii) உ. அ மின்வழங்கலுக்கான மின் தேவைக் கட்டணமும் தா.அ மின் வழங்கலுக்கான நிலையான கட்டணமும், ஆணையம் அவ்வப்போது பல்வேறுவகை நுகர்வோர்களுக்கு விதிக்கும் கட்டணவீதத்தில், அவர்களால் செலுத்தப்பட வேண்டும்.

iii) திறன் காரணிக்கான ஊக்கங்குறைப்புத் தொகை –
ஒவ்வொரு நுகர்வோரும் தம் திறன் காரணியைப் பின்வருமாறு நிலைநிறுத்த வேண்டும்.

தா அ மின் வழங்கலுக்கு : 0.85 பிந்தல் (lag)
உ.அ. மின் வழங்கலுக்கு : 0.90 பிந்தல்

தவறினால், ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் வீதத்தில் ஊக்கங்குறைப்பு ஈட்டுத் தொகையைக் கட்ட நேரிடும். அதேபோல, குறிப்பிட்ட மட்டத்துக்கும் அதிகமான திறன் காரணியை நிலைநிறுத்த, நுகர்வோருக்கு ஊக்கந்தர, ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் ஊக்கமூட்டுந் தொகை வழங்கப்பட்டு பட்டியலில் நேர் செய்யப்படும்.

iv) கிளையலைகளைக் கொட்டுதலுக்கான (harmonics dumping) கூடுதல் கட்டணம், நுகர்வோர்கள் தமது அமைப்பில் நிறுவிய சாதனம் கிளையலைகளை உருவாக்கினால், உரிமதாரரின் பகிர்மான அமைப்பில் கிளையலைகளைச் செலுத்துதலைத் தவிர்க்க, அவற்றை அடக்கத் தேவைப்படும் கிளையலை அடக்கிக் கருவிகளை நிறுவ வேண்டும். அப்படிச் செலுத்தப்படும் கிளையலைகளைக் கண்காணிக்க உரிமதாரர் உகந்த அளவீட்டுக் கருவிகளை நிறுவிட உரிமையுடையவராவார். நுகர்வோர் அத்தகைய கருவிகளை நிறுவத் தவறினால், அவர் ஆணையம் அவ்வப்போது விதிக்கும் வீதத்தில், உரிய ஈட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும்.

v) மாநில அரசு மின்சாரம் வழங்கியதற்கோ நுகர்ந்ததற்கோ அவ்வப்போது விதிக்கும் தீர்வை (duty) அல்லது வரியை, ஏதாவது அப்படி விதிக்கப்படும் போது, அவ்வப்போது அரசு குறிப்பிடும் வீதங்களில் அதை அரசின் கணக்கில் செலுத்த வேண்டும்.

vi) தற்காலிக மின்வழங்கலின் காலத்தை நீட்டுவிக்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் செலுத்தப்பட்டுள்ள முன்கூட்டிய மின்னோட்ட நுகர்வுக் கட்டணம் போதுமானதாக உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையான மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தை முன்கூட்டிய மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தில் நேர்செய்துகொள்ள வேண்டும்.

**2) கீழுள்ள பெயர்களில் பல்வகைக் கட்டணங்கள் வழங்கப்படும்**

i) மின்கொண்மி (Capacitor) ஈட்டுத் தொகைக் கட்டணம்
ii) கூடுதல் மின் தேவைக் கட்டணம்
iii) கூடுதல் ஒப்பந்தச் சுமைக் கட்டணம்
iv) தாமதச் செலுத்த உபரிக் கட்டணம்
v) அவ்வப்போது கட்டும்படி விதிக்கும் கூடுதல் காப்பு வைப்புத் தொகை
vi) மின்னிணைப்பு, மின் தொடர் இடமாற்றக் கட்டணம்
vii) பெயர் மாற்றக் கட்டணம்
viii) மீளவிணைத்தல் கட்டணம் (reconnection charge)
ix) மின்னளவி அட்டை பதிலீட்டுக் கட்டணம்
x) திரும்பிவிட்ட காசோலை சேவைக் கட்டணம்
xi) மின்னளவி சார்ந்த கட்டணங்கள்
xii) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்

**3) குறைந்த பட்ச கட்டணம் பொருந்தும் வகையில்**

**5. பல்வகைக் கட்டணங்கள்**

**1.** மின் கொண்மி ஈட்டுத் தொகைக் கட்டணம்

a) 3 ப.தி (HP) உள்ள சுமை கொண்ட மின்னோடிகளோ (motor) பற்றுவைப்பு மின் மாற்றிகளோ (welding transformer) இணைந்துள்ள புதிய மின்னிணைப்புகளில் போதுமான வரையளவும் (rating) I.S.I (இந்தியச் செந்தர அமைவனம்) தரமுள்ள மின்கொண்மிகளும் இணைக்கப்படாவிட்டால் அவற்றுக்கு புதிய தாழ்வழுத்த மின்னிணைப்பு தரப்படமாட்டாது.

b) ஏற்கனவே இணைக்கப்பட்டு திறன் காரணி ஊக்க மூட்டும், ஊக்கம் குறைப்புத் திட்டத்தில் வராமல் தற்போது நிலவும், தா.அ மின்னிணைப்புகளைப் பொருத்த வரையில், அவற்றில் 3 ப. தி அளவு இணைந்துள்ள சுமை கொண்ட அல்லது அதற்கும் அதிகமான சுமை கொண்ட மின்னோடிகள் இணைந்திருந்தாலோ பற்றுவைப்பு மின்மாற்றிகள் (அவை எந்த வரையளவு சுமைபெற்றனவானாலும்) இணைந்திருந்தாலோ அத்தகைய மின்னிணைப்புகளின் நுகர்வோர்களுக்கு உடனே போதுமான வரையளவுள்ள மின்கொண்மிகளை நிறுவும்படி இருமாதக் காலக்கெடுவுள்ள அறிவுப்பு தரப்பட வேண்டும். மேலும் அவர்கள் அத்தகைய மின்கொண்மிகளை இணைக்கும் வரையில் அவர்களால் நுகரப்படும் மின்சார விலையில் 10 சதவீதம் அளவு ஈட்டுத்தொகைக் கட்டணத்தை முந்தைய 4 மாதங்களிலிருந்தே இனி கட்டும் கடப்பாடு உடையவர்களாவர். போதுமான மின்கொண்மிகள் இணைக்கப்படாவிட்டாலோ அல்லது இணைந்துள்ள மின்கொண்மிகள் பழுதுடையவனாய் இருந்தாலோ 10% ஈட்டுத்தொகையைப் போதாமல் அல்லது பழுதற்று உள்ள மின் கொண்மிகளின் வரையளவுக்கு நேர்விகிதத்தில் செலுத்த வேண்டும்.

c) நிறுவப்பட்டுள்ள மின்கொண்மிகளின் வரையளவு போதுமானதாக இல்லாத போதும் அல்லது அவற்றில் சில பழுதுற்று உள்ளபோதும் அத்தகைய மின்னிணைப்புகளுக்கு உரிமதாரர் மின்கொண்மி ஈட்டுத்தொகைக் கட்டணத்தை வசூலிப்பதோடு நில்லாமல், அவர் எழுத்து மூலமாக அத்தகைய நுகர்வோர்களுக்கு இருமாதக் காலக் கெடு கொடுத்து அதற்குள் போதுமான மின் கொண்மிகளை இணைக்கும்படியும் அல்லது பழுதுற்ற கொண்மிகளை நல்ல மின்கொண்மிகளால் மாற்றி வைக்கும்படியும் அல்லது அவற்றை உடனே பழுது பார்க்கும்படியும் எச்சரிக்கை அறிவிப்பும் வழங்க வேண்டும்.

**(2) மிகை மின்தேவைக் கட்டணம்**

ஒப்பளித்த (sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகைமின் தேவைக் கட்டணம் பின்வருமாறு:

i) உ. அ (HT) மின் வழங்கலைப் பொறுத்தவரையில், எம்மாதப் பெரும மின்தேவைக் கட்டணமும் மின் வழங்கல் இருப்பிடத்தில் குறிப்பிட்ட அம்மாதத்தில் பதிவாகிய பெரும் கி.வோ.ஆ தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் விழுக்காடு, இவற்றில் எது பெரியதோ, அதன் அடிப்படையில் அமைய வேண்டும். மிஞ்சி விட்ட தேவைக்கு மட்டுமே இயல்புக் கட்டணத்தைப் போன்று இரு மடங்கு கட்டணத்தைக் கணக்கிட வேண்டும்.

ii) தா. அ (LT) மின் வழங்கலைப் பொறுத்த வரையில்

a) வீட்டு, வேளாண்மை மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக் கட்டணம் பொருந்தாது.

b) 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்குச் சமமாகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ ஒப்பந்த மின் தேவையும் இணைந்துள்ள மின்சுமையும் உள்ள பிறவகை தா. அ மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக்கட்டணம் பொருந்தாது.

குறிப்பு – 1 நுகர்வோரின் ஒப்பந்த மின்தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்குச் சமமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் இணைந்துள்ள சுமை ஒப்பந்த மின் தேவையினும் அதிகமாகவும் ஆனால் 1.6 கி வா (25 ப.தி) அளவுக்கு, நிகழ்விற்கேற்ப, குறைவாக இருந்தாலும் உரிமதாரர் மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியை நிறுவி அவரை மிகை மின் தேவைக் கட்டணஞ் செலுத்தும் வகையினத்துக்குள் கொணர வேண்டும். பின்னர் நிறுவிய பிறகு, பதிவாகும் மின் தேவை, ஒப்பந்த மின் தேவையினும் மிகையாக இருந்தால், நுகர்வோருக்கு முறையாக அறிவிப்பு தந்து விட்டு நிலவும் மின் தேவையை, பதிவான மின் தேவையளவுக்குத் திருத்தி அடுத்த பட்டியலில் மிகை மின் தேவைக் கட்டணத்துக்கு விதிக்கும் அனைத்துக் கட்டணங்களையும் உடன் சேர்க்க வேண்டும். மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் மின்னளவியை நிறுவி, நுகர்வோரை மிகை மின் தேவைக் கட்டணம் செலுத்தும் வகையினத்துக்குள் கொண்டு வந்து நுகர்வோருக்கு முறையாக அறிவிக்காத வரையில் உரிமதாரர் மிகை மின் தேவைக் கட்டணத்தை விதிக்கக் கூடாது.

c) மேலே துணைப்பிரிவுகள் a, b ஆகியவற்றில் குறிப்பிட்டவற்றைத் தவிர பிற தா.அ மின்னிணைப்புகளுக்கு, ஒப்பந்த மின் தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்கும் அதிகமாகவும் ஒப்பந்த மின்தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்குக் குறைந்திருந்தாலும் மின் தேவைப் பதிவு வசதி பெற்றுள்ளவர்களுக்குக் கட்ட வேண்டிய மின் தேவைக் கட்டணம் கட்ட வேண்டும்.

I) பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் கூடுதலாகாத போது ஒப்பந்த மின் தேவையிலும் மிகையாகவுள்ள ஒவ்வொரு கி.வா அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த ஆற்றலுக்கான கட்டணத்தில் 1 விழுக்காடு கட்ட வேண்டும்.

II) பதிவான மின்தேவை 112 கி. வா அளவினும் மிகையாக உள்ளபோது, முதலிரு நேர்வுகளில் 112 கி.வா வரை, ஒப்பந்த மின்தேவையினும் மிகையாகவுள்ள ஒவ்வொரு கி. வா அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த ஆற்றலுக்கான கட்டணத்தில் 1 விழுக்காட்டிலும் 112 கி. வா அளவினும் அதிகமாக உள்ளதற்கு ஒவ்வொரு கி.வா அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 1.5 விழுக்காட்டிலும் கட்டவேண்டும். மேலும், மூன்றாவதாகவும் அதற்கடுத்தும் நேரும் நேர்வுகளில் 112 கி.வா அளவுக்கும் அதிகமாகும் ஒவ்வொரு கி.வா அளவுக்கும் அதன் பகுதிக்கும் மூன்று விழுக்காடு மேனியில் கட்ட வேண்டும்.

III) மூன்றாவதாகவும் அதற்கு அடுத்தும் ஒப்பந்த மின் தேவையினாலும் பதிவாகும் மின் தேவை மிகையாகும் போது,

A) பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் மிகுதியாகாத போது, நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்டபிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை

இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும்.

B) பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் மிகையானால் நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்ட பிறகு நிலவும் ஒப்பந்த மின் தேவையை 112 கி.வா அளவுக்கு இரண்டாம் நிகழ்விற்குப் பிறகு ஒரு மாதக் காலத்துக்குள் மாற்றி, கூடுதல் சுமைக்கு விதிக்கும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும். பதிவான மின் தேவை மூன்றாவதாகவும் அதற்கடுத்தும் 112 கி.வா அளவினும் மிகையானால், நுகர்வோர் விரும்பினால் உ.அ மின் வழங்கல் பெற விருப்பம் தெரிவிக்கலாம்.

iii) தற்காலிக மின் வழங்கலைப் பொருத்தவரையில் மிகை மின் தேவைக் கட்டணத்தை, அறிவித்த விலையில் முந்தைய ஆறுமாதம் அல்லது மின் வழங்கல் தந்த தேதி இதில் எது குறைவோ அந்தக் கால அளவுக்கான சிறுமக்கட்டணத்துக்கும் நுகர்வோரிடமிருந்து ஏற்கனவே வசூலித்த மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடாகக் கொள்ள வேண்டும்.

**(3) மிகை ஒப்பந்தச் சுமைக் கட்டணம்**

உதவித்தொகை நல்கும் வகையிலான வேளாண்மை மின்னிணைப்புகளுக்குப் பொருந்தும் இந்தக் கட்டணங்கள் பின் வரும் காரணங்களால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும்.

i) பிற வாயில்களிலிருந்து குறுக்கு உதவித்தொகை நிறுத்தப்பட்டு தக்க நிதிக்குக் கூடியதாகும், வேளாண்மை மின்னிணைப்புக் கட்டணம் உருவாகும் வரை, ஒப்பந்தச் சுமைக்கு இசைந்திடல்.

ii) பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் கட்டுத் திட்டத்துக்காக நிலத்தடிநீர் கட்டுப்படுத்த அரசு அறிவிக்கும் நெறிமுறைகளுக்கு இசைந்திடல்.

அதன்படி, இவற்றுக்கு இசைவாக இந்த விதித்தொகுப்பில் வேளாண்மை மின்னிணைப்புக்கான சிறப்பு விதி வகுப்புகள் கீழ்வருமாறு வகுக்கப்பட்டு, அவை, பிறவகைகளிலிருந்தான குறுக்கு உதவித்தொகை நல்கல் நீக்கப்படும்வரை நடைமுறை படுத்தப்பட்டு இருக்கும்.

a) வேளாண்மை மின்னிணைப்பில் தயாரிப்பாளரின் வரையளவு மற்றும் கொள்ளளவைச் சுட்டிக்காட்டும் பெயர்த்தட்டு நிலைத்து பொருத்தப்படாத மின்னோடிகளைப் பயன்படுத்தக் கூடாது.

b) வேளாண்மை மின்னிணைப்பு தரும் போது மதிப்பிடும் நிறுவல் திறன், நுகர்வோர் விண்ணப்பித்த நிறுவல்திறன் அளவினும் மிகையாக இருந்தால், உரிய பொறியாளர் மின் வழங்கல் கோரும் நுகர்வோர் மதிப்பிட்ட திறன் பற்றிய முடிவை ஏற்க மறுக்கிறார் எனில், அவர் அடுத்த உயர் அலுவலருக்கு, உரிமதாரர் ஏற்றுக் கொள்ளக்கூடிய முகமை அமைப்பிலிருந்து மின்னோடி நிறுவல்திறன் பற்றிய சான்றிதழைத் தந்து மேல் முறையீடு செய்யலாம். அடுத்த உயர் அலுவலரின் முடிவே இறுதியானது மட்டுமன்றி, நுகர்வோரைக் கட்டுப்படுத்த வல்லதுமாகும்.

c) நிலவும் வேளாண்மை மின்னிணைப்பைப் பொறியாளர் இயல்பாகக் குறிப்பிட்ட பருவ முறையில் சரிபார்க்கும் போது மின்னோடியில் பொருத்தப்பட்டுள்ள பெயர்த்தட்டு, மின்னோடியின் சரியான வரையளவைக் குறிக்கவில்லையெனக் கண்டறிந்தாலோ அல்லது பெயர்த்தட்டு தொலைந்து விட்டிருந்தாலோ அல்லது இதற்காக அதிகாரம் பெற்ற பொறியாளர் மதிப்பீடு செய்த அம்மின்னோடிக்கான கொள்ளளவு சோதனை அறிக்கையில் உள்ள வரையளவைவிட கூடுதலாக இருந்தாலோ, நுகர்வோர் மீது இந்த விதித்தொகுப்பின்படி உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

d) பொறியாளர் அம்மின்னோடிக்கு மதிப்பிட்ட கொள்ளளவை அல்லது நிறுவல் திறனை ஏற்க மறுக்கிறார் என்றால் அம்மின்னோடியைக் கொண்டு சென்று உரிய அரசு ஆய்வுக் கூடத்திலோ அல்லது வேறு உரிமதாரர் ஏற்கக் கூடிய முகமை அமைப்பிலோ தனது சொந்தச் செலவில் சோதித்து உரிய சோதனை அறிக்கையைக், கடிதம் தந்த இரு மாதங்களுக்குள் உரிய அலுவலரிடம் தருமாறு நுகர்வோருக்குப் பொறியாளர் ஒரு கடிதம் தர வேண்டும்.

அளவீடு உள்ள அல்லது இல்லாத அனைத்து மின்னிணைப்புகளுக்குமான மிகை ஒப்பந்தச் சுமைக் கட்டணம் ஒரு ப.தி அளவுக்கு அறுபது ரூபாய் வீதம் முதலிலிருந்து அத்தகைய மிகை ஒப்பந்தச் சுமை இணைப்பில் நிலவும் வரையில் கட்ட வேண்டும்.

**(4.) தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் (தா செ உ க BPSC)**

i) நுகர்வோர்களைப் பொருத்தவரையில் அனைத்துப் பட்டியல்களையும், பட்டியலில் குறிப்பிட்டுள்ள கெடு தேதிக்குள்ளும், தா அ நுகர்வோர்களைப் பொருத்த வரையில் நுகர்வோர் மின்னளவி அட்டையில் உள்ள கெடு தேதிக்குள்ளும் எச்சரிக்கை அறிவிப்பில் தந்துள்ள காலத்துக்குள்ளும் கட்டி விட வேண்டும்.

ii) கெடு தேதிக்குள் பட்டியல் கட்டணம் செலுத்த தவறும், புறக்கணிக்கும் எந்தவொரு உ.அ. நுகர்வோரும் கெடு தேதிக்கு மறுநாளிலிருந்து தாமதச் செலுத்த உபரிக் கட்டணமும் செலுத்திட உரியவராவார். அறிக்கைக் கால இறுதி நாளுக்குள் பட்டியல் பணம் கட்டத்தவறும், புறக்கணிக்கும் எந்தவொரு தா. அ. நுகர்வோரும் அறிக்கைக் கால இறுதி நாளுக்கு அடுத்த நாளிலிருந்து தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் செலுத்த உரியவராவார். தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் சிறும அளவாகப் பதினைந்து நாட்களுக்குக் கட்ட வேண்டும். தாமதம் 15 நாளுக்கும் கூடுதலாகவும் 1 மாதத்துக்கும் மிகாமலும் இருந்தால் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் ஒரு முழு மாதத்துக்கும் கட்ட வேண்டும். ஒரு மாதத்தினும் கூடுதலானால், அப்படி உள்ள முழு மாதங்களின் எண்ணிக்கையிலும் மேலுள்ள பகுதி மாதத்துக்கு, நாட்களின் எண்ணிக்கைக்கு நேர் விகிதத்திலும் கட்ட வேண்டும்.

iii) உ. அ. நுகர்வோரின் கெடு தேதியும் தாழ் அழுத்த நுகர்வோரின் அறிக்கைக் கால இறுதி நாளும் ஒரு விடுமுறை நாளில் அமைந்து விட்டால், தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் அதற்கு அடுத்த பணி செய்யும் நாளிலிருந்து கட்ட உரியதாகும்.

iv) தாழ் அழுத்த நுகர்வோரைப் பொருத்த வரையில் தாமதச் செலுத்த உபரிக்கட்டணம் வழங்கப்பட்ட மின்சாரத்துக்கான விலையில் நிலுவையில் உள்ள தொகைக்கு 1.5 விழுக்காடு மேனியில் அமையும்.

v) உ.அ நுகர்வோர்களைப் பொருத்த வரையில் தாமதச் செலுத்த உபரிக்கட்டணம் அறிக்கைக் காலத்துக்கு ஒரு மாதத்திற்கு 1.5 விழுக்காடு மேனியில் விதிக்கப்பட வேண்டும். அறிக்கைக் காலத்துக்குப் பிறகு நுகர்வோர் உரிமதாரரிடம் விண்ணப்பத்தை மட்டும் கொடுத்து விட்டு, கால நீட்டிப்பைப் பயன்படுத்தினால், தாமத நாட்களின் எண்ணிக்கை எதுவானாலும் உரிய கட்டண இசைவு தந்த கெடு தேதி முடிந்ததிலிருந்து ஒரு மாதத்துக்கு 3.0 விழுக்காடு மேனியில், ஒரு மாத அளவுடைய தா.செ.உ.க விதிக்கப்பட வேண்டும். நீட்டிப்பு தரப்படாவிட்டாலோ, நீட்டித்த காலக்கெடுவிற்குப் பிறகும் கட்டுவது தாமதமானாலோ, தா.செ.உ.க மாதத்துக்கு 1.5 விழுக்காடு மேனியில் விதிக்கப்பட வேண்டும்.

vi) மின்சார விலையைத் தவிர, நிலுவையில் உள்ள வேறு தொகைக்கு, உரிமதாரரின் விருப்பத்திற்கேற்ப மாதத்துக்கு 1.5 விழுக்காடு மேனிக்கு மிகாமல் தா செ உ க விதிக்கப்பட வேண்டும்.

vii) அடுத்த பட்டியலில் சேர்க்கப்பட்ட குறை மதிப்பீட்டுத் தொகையைப் பொருத்த வரையில் உ.அ. நுகர்வோர்களுக்கு அப்படி குறைமதிப்பீட்டுத் தொகை சேர்ந்த அடுத்த பட்டியலில் செலுத்த வேண்டிய காலக் கெடுவிற்குப் பிறகு தா செ உ க நடைமுறையில் வரும். தா.அ. நுகர்வோர்களுக்கு அறிக்கைக் காலக் கடைசி நாளுக்கு மறு நாளிலிருந்து தா.செ. உ.க. நடைமுறைக்கு வரும்.

viii) குறைமதிப்பீட்டுத் தொகையைத் தவணைகளில் கட்ட இசைவு தந்திருந்த நேர்வுகளில் தவணை செலுத்தும் கால அட்டவணையின்படி பணம் கட்டத் தவறினால் தவறும் தவணையின் காலக் கெடு முடிந்த தேதியின் மறுநாளிலிருந்து தா செ உ க கணக்கிடப்பட்டு அத்தொகை தவணைத் தொகையுடன் சேர்த்து கட்டப்பட வேண்டும்.

ix) மின்னிணைப்பின் கணக்கு முடிவிற்றிருந்தால் காப்பு வைப்புத் தொகையின் அசலும் அதில் திரண்ட வட்டியும் முதலில் தா.செ.உ.க தொகைக்கு ஈடுசெய்த பிறகே பிற நிலுவைகளுக்காகக் கழித்துக் கொள்ளலாம்.

x) தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் தவிர்த்த பிற நிலுவைத் தொகைகளுக்கு மட்டுமே தா.செ.உ.க விதிக்கப் படல் வேண்டும்.

xi) மின்சார வரி மீது தாமதச் செலுத்த உபரிக் கட்டணமோ, தாமத செலுத்த உபரிக் கட்டணத்தின் மீது மின்சார வரியோ விதித்தல் கூடாது.

## 5. கூடுதல் காப்பு வைப்புத் தொகை

i) காப்பு வைப்புத் தொகையின் அளவு போதுமானதாக உள்ளதென உ.அ நுகர்வோருக்கு ஓராண்டுக்கு ஒருமுறையும், தா.அ. நுகர்வோருக்கு இரண்டாண்டுக்கு ஒரு முறையும் மீள் பார்வையிட்டு, தேவைப்பட்டால் மாற்றப்பட வேண்டும். இதற்காகக் காப்பு வைப்புத் தொகை சார்பில் திரண்ட வட்டியும் கண்க்கில் எடுத்தபின்பு மறு நிர்ணயம் செய்யப்படும். அத்தகைய மீள் பார்வை ஒவ்வொராண்டும் ஏப்ரல், மே மாதத்தில் செய்யப்பட வேண்டும். காப்பு வைப்புத் தொகைக்கான வட்டிவீதம், இது தொடர்பாக ஆணையம் உரிமதாரருக்குத் தரும் நெறி முறையின் அடிப்படையில் அமையும்.

ii) காப்பு வைப்புத் தொகை போதுமானதாக உள்ளதா எனக் கணக்கிடுதல், குறிப்பிட்ட வகைக்கான பட்டியல் இடும் கால முறையைச் (periodicity) சார்ந்து அமையும்.

a) மாதமொரு முறை பட்டியலிடும் நுகர்வோர் வகையினங்களுக்கு, ஏப்ரல் மாதத்திற்கு முந்திய 12 மாதங்களுக்கான கட்டணத்தின் அடிப்படையில் உள்ள மாதச் சராசரி மதிப்பில் இரு மடங்காக காப்புவைப்புத் தொகை அமையும்.

b) இரு மாதமொரு முறை பட்டியலிடும் நுகர்வோர் வகையினங்களுக்கான காப்புவைப்புத் தொகை முந்தைய 12 மாதங்களுக்கான மின்சாரக் கட்டணத்தின் அடிப்படையில் உள்ள மாதச் சராசரி மதிப்பில் மூன்று மடங்காக அமையும்.

c) அரையாண்டுக் கொருமுறை பட்டியலிடும் நுகர்வோர் வகையினங்களுக்கு உரிய காப்புவைப்புத்தொகை மாதச் சராசரி மதிப்பில் ஏழு மடங்காக அமையும்.

iii) ஆணையம் அவ்வப்போது குறிப்பிடுகின்றபடி, வங்கி வட்டி வீதத்திலோ அல்லது அதற்கும் அதிகமான வட்டி வீதத்திலோ, வட்டி கணக்கிடப்பட்டு நுகர்வோரின் காப்புவைப்புத்தொகைக் கணக்கில் ஒவ்வோராண்டின் தொடக்கத்தில், அதாவது ஏப்ரலில் வரவு வைக்கப்பட வேண்டும். அப்படி திரளும் வட்டியுடன் கூடிய, நுகர்வோரின் கணக்கில் உள்ள வரவுத் தொகை, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதக் கடைசியில் ஒவ்வொரு நுகர்வோருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

iv) கணக்கில் உள்ள தொகை, மாற்றப்பட்ட காப்புவைப்புத் தொகையினும் குறைவாக இருந்தால், குறைவுபடும் மீதத் தொகை, கூடுதல் காப்பு வைப்புத்தொகையாக தனி அறிவிப்பு தந்தோ தா.அ. மின்னிணைப்புகளில் நுகர்வோரின் மின்னளவி அட்டையில் தனியாகத் தெளிவாகக் குறிப்பிட்டோ வசூலிக்கப்படும். அதைச் செலுத்த 30 நாட்கள் அளவுக்கு அறிவிப்பில் காலக்கெடு தரப்பட வேண்டும். அப்படி அந்தக் காலக்கெடுவுக்குள் உரிய தொகை செலுத்தப்படாவிட்டால் மின்னிணைப்பு துண்டிப்புக்குள்ளாக நேரும்.

v) மீள்பார்வையின்போது காப்புவைப்புத்தொகை தேவைக்கும் மிகையாக இருந்தால் எதிர்கால இரு பட்டியல்களில் அத்தொகை ஈடு செய்து வரவு வைக்கப்படும். அவ்வாறு அத்தகைய இரண்டு பட்டியல்களில் நேர் செய்த பிறகும் திருப்பித் தரப்படவேண்டிய மீதத் தொகை இருந்தால், அது காசோலையாக மூன்றாம் தேவைப்பட்டியல் தொகையைக் கட்ட வேண்டிய காலக் கெடுவுக்குள் நுகர்வோருக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும்.

vi) உரிமதாரருக்கு ஏதாவதொரு தொகையை நுகர்வோர், அதற்காகக் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தத் தவறியிருந்தால், உரிமதாரர் வேண்டுமெனக் கருதினால், அவரது பிற உரிமைகளுக்குக் குந்தகமேதும் இல்லாமலும் அந்தக் கூடுதல் உரிமையோடும் காப்பு வைப்புத்தொகை மொத்தத்தையுமோ ஒரு பகுதியையோ அதன் வட்டியுடன், நுகர்வோரிடமிருந்து பெறப்பட வேண்டிய அந்தத் தொகைக்காக ஈடுசெய்துக் கொள்ளலாம்.

## (6) மின்னிணைப்பு, மின்தொடர் இடமாற்றக் கட்டணம்

**1.** மின்னிணைப்பு / மின்தொடர் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும்.

மதிப்பீடு பின்வரும் உறுப்பினங்களை உள்ளடங்கும்

i) பழைய இடத்தில் அமைப்பைப் பிரிக்கும் கட்டணம்
ii) பழைய இடத்திலிருந்து புதிய இடத்துக்குப் போக்குவரத்து செய்வதற்கான கட்டணம்
iii) புதிய இடத்தில் அமைப்பை நிறுவுவதற்கான கட்டணம்
iv) பயன்படுத்தப்படாத பழைய மீட்புப் பொருட்களுக்கான தேய்மானம், தேவைப்பட்டால் மட்டும்
v) புதிய பொருள்களுக்கான விலை, தேவைப்பட்டால் மட்டும்
vi) மேற்பார்வைச் செலவுக்கான கட்டணம்

**2.** கட்டிடத்தைச் சீர்திருத்துவதன் காரணமாக, ஒரே இடத்தில் நிறுவியதை தற்காலிகமாகப் பிரித்து மீள நிறுவுதல் அல்லது மின்னிணைப்பை இடமாற்றம் செய்தல், அதற்கான உரிய கட்டணத்தைச் செலுத்தியதும், நிறைவேற்றப்படும்.

**3.** மின்னிணைப்புக்கான இடமாற்றத்தில் கதவிலக்கமோ, கதவுத் துணையிலக்கமோ, நில அளவைப் புல எண்ணோ (Survey field number) மாறினால், அந்நிகழ்வு புதுமின்னிணைப்பு தருவதற்கு நிகராகக் கருதப்பட வேண்டும்.

உரிமதாரர், வேண்டுமெனக் கருதினால், ஒரு மின்னிணைப்பின் மீதுள்ள அனைத்து
நிலுவைத் தொகைகளையும் செலுத்தினால் ஒழிய, இடமாற்றம் தரப்படமாட்டாது.

**(7) பெயர் மாற்றக் கட்டணம்**

நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் படிவம் **(1)** இல் பின் வருவனவற்றை உடனிணைத்து தரப்பட வேண்டும்.

a) உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரிகட்டிய பற்றுச் சீட்டு போன்ற உரிமையை நிலை நாட்டும் சான்றுமெய்ப்பு (Proof)

b) சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ், அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ.80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Non judicial) முத்திரைத்தாளில் இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் **(3)** இலான காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனித (Notary Public) ரின் அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான சூளேற்பு உறுதிமொழிப்பத்திரம் (Affidavit).

c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப் படிவமும்.

பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், பிற நிகழ்வுகளில், இந்த
விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் **(1)** மற்றும் **(2)** இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத் தரப்பட வேண்டும்.

a) இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் **(4)** இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணம்.

b) காப்புவைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம். அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்புவைப்புத்தொகை கட்ட வேண்டும்.

c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும்.
**விளக்கம்** துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும்.

(8) **மீளிணைப்புக் கட்டணம்**

உரிமதாரர், ஆணையத்தால் அவ்வப்போது குறிப்பிடப்படும் மீளிணைப்புக் கட்டணத்தை உ.அ, தா.அ நுகர்வோரிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

(9) **நுகர்வோர் மின்னளவி அட்டை பதிலீட்டுக் கட்டணம்**

மின்னளவி அட்டை தொலைந்து விட்டாலோ, சேதமுற்றாலோ அப்போது நுகர்வோரின் மின்னளவி அட்டையை பதிலீடு செய்ய, உரிமதாரர் ஆணையம் அதற்காகக் குறிப்பிடும் வீதத்தில் கட்டணத்தை வசூலிக்க வேண்டும். மின்னளவி அட்டையிலுள்ள கட்டங்கள் முழுமையாய் பூர்த்தி ஆகிவிட்டால், புதிய மின்னளவி அட்டை இலவசமாக வழங்கப்படும்.

(10) **மதிப்பளிக்கப்படாத காசோலை சேவைக் கட்டணம்**

நுகர்வோர் தந்த காசோலையை எந்தக் காரணத்துக்காக வங்கி திருப்பியனுப்ப நேர்ந்தாலும் அதற்கான சேவைக் கட்டணத்தை, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் கட்டண வீதத்தில் வசூலிக்க வேண்டும்.

(11) **மின்னளவி சார்ந்த கட்டணங்கள்**

நுகர்வோர் மின்னளவியைத் தானே கொள்முதல் செய்ய தேர்ந்தெடுத்தால் தவிர, பல்வேறு வகை நுகர்வோர்களுக்கு ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் மின்னளவி வாடகைக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். அப்படி கட்ட வேண்டிய நிகழ்வுகளில், உரிமதாரர் மின்னளவி வாடகைக் கட்டணத்தை வசூலிப்பதோடு ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் உரிய கட்டண வீதங்களில் மின்னளவி மற்றும் மின்னளவிப்பலகை மாற்றுக் கட்டணங்களையும் மின்னளவிச் சோதனை, நிறுவல் அமைப்புச் சோதனை மற்றும் ஆய்வு போன்றவற்றுக்கான கட்டணங்களையும் வசூலிக்க வேண்டும்.

(12) **விண்ணப்பப் பதிவுக் கட்டணம்**

உரிமதாரர் பின் வருபவற்றிற்கு உ.அ / தா. அ நுகர்வோர்களிடமிருந்து ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் வீதங்களில் பின்வரும் விண்ணப்பப் பதிவுக் கட்டணங்களை வசூலிக்க வேண்டும்.

a) தாழ் அழுத்தத்திலிருந்து உயர் அழுத்தத்துக்கும் அல்லது அதற்கு எதிர்மாறாகவும் மின்னிணைப்பை மாற்றுவதற்காகவும், தாழ் அழுத்த, உயர் அழுத்த மின்னிணைப்புகளில் கூடுதல் சுமைகள் தருவதற்காகவும் நுகர்வோர் விண்ணப்பிக்கும்போது அவற்றுக்கான உரிய வீத விண்ணப்பப் பதிவுக் கட்டணம்.
b) தா.அ / உ.அ மின்னிணைப்புகளின் மின்சுமை, மின்தேவை குறைப்பதற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம்.
c) தா.அ, உ.அ மின்னிணைப்புகளின் இடமாற்ற விண்ணப்பப் பதிவுக் கட்டணம்
d) தெரு விளக்கு மின்னிணைப்பு விண்ணப்பப் பதிவுக் கட்டணம்
e) ஊர்திகள் மோதுவதாலோ மற்ற விபத்துகளாலோ உடையும் கம்பங்களைப் பதிலீடுவதற்கான (வைப்புத்தொகை அளிப்புப் பணிகளின் கீழ்) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்
f) வைப்புத்தொகை அளிப்புப் பணிகளின் கீழ் மின் தொடரை இடமாற்றவும் அல்லது மின் தொடரின் தடம் மாற்றுவதற்கும் தரும் விண்ணப்பப் பதிவுக் கட்டணம்
g) தற்காலிக மின்னிணைப்பு விண்ணப்பப் பதிவுக் கட்டணம்

## 6. சிறுமக் கட்டணங்கள் (Minimum charges)

நுகர்வோர், உரிமதாரருக்கு கீழே விவரமாகத் தந்துள்ளபடி ஒவ்வொரு மின்னிணைப்புக்கும் சிறுமக் கட்டணத்தைக் கட்ட வேண்டும். மின்சாரம் நுகரப்படாவிட்டாலும், நீதிமன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும், வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சிறுமக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும், சிறுமக் கட்டணத்தை கட்டியேயாக வேண்டும்.

a) உரிமதாரரின் துண்டிப்புக்கான உரிமைப்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கி.வோ.ஆ. அளவில் உள்ள மின் தேவையின் அடிப்படையில் பின்வருமாறு விதித்து வசூலிக்க வேண்டும்.

i) துண்டிப்பு ஒரு முழு மாதமானால் மின் தேவையில் 20 விழுக்காடு

ii) துண்டிப்பு மாதப் பகுதியாக இருந்தால் உண்மையாகப் பதிவான மின்தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவை அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அது.

b) நுகர்வோரின் வேண்டுதலின்படி உயர் அழுத்த மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால் மாதச் சிறுமக் கட்டணத்தைக் கணக்கிட கருத வேண்டிய கி.வோ.ஆ அளவில் உள்ள மின்தேவை, உண்மையில் நடப்பில் பதிவான கி.வோ.ஆ அளவு மின்தேவை, (துண்டிப்புக் காலம் மாதப் பகுதியாக இருக்கும்போது) ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் அடிப்படையிலான விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதுவாகும்.

உரிமதாரரின் நிறுவனத்தில் கதவடைப்பு, வேலைநிறுத்தம், தீ, புயல், வெள்ளப்பெருக்கு மற்றும் பிற உரிமதாரரின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் உரிமதாரர் மின்சாரம் தர இயலாத நிலையில் இருந்தாலோ அல்லது அவற்றைப் போன்ற காரணங்களால் நுகர்வோர் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியளவு மட்டுமோ மின்சாரம் நுகர்வதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளாரென உரிமதாரர் நிறைவடைந்திருந்தாலோ, பட்டியலிடத் தக்க மின் தேவையின் 20 விழுக்காடு அல்லது பதிவான மின்தேவை இவற்றில் எது அதிகமோ அதற்கு உரிமதாரர் நுகர்வோரிடமிருந்து உண்மையில் நடப்பில் நுகர்ந்த மின்சாரக் கட்டணத்தோடு மாதச் சிறுமக் கட்டணத்தையும் வசூலிக்கலாம் என விதிக்கப்படுகிறது.

மேலும் நுகர்வோர் மின்சாரம் நுகர்வதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தால்

i) நுகர்வோர் தொழில் நல (Labour) அலுவலரிடமிருந்து கதவடைப்பு, வேலைநிறுத்தம் அல்லது தற்காலிகமான மூடுதல் நிலவும் கால அளவையும் அந்நிலை அறிவிக்கப்பட்ட தேதியும் பற்றிய சான்றிதழைத் தர வேண்டும்.

ii) கதவடைப்போ, வேலைநிறுத்தமோ தொடங்கும் தேதியை, பெரும மின் தேவை காட்டும் கருவியை மீட்டமைக்க, நுகர்வோர் காலந் தாழ்த்தாது உடனே அறிவிக்க வேண்டும். தற்காலிகமான மூடுதலைப் பொருத்தவரையில் அப்படி மூடப்போவதை நுகர்வோர் உடனே தெரிவிக்க வேண்டும். வேலை நிறுத்தமோ, கதவடைப்போ, தற்காலிகமான மூடுதலோ விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு அப்படி விலக்கிக் கொள்ளப்பட்ட தேதியையும் அறிவிக்க வேண்டுமென விதிக்கப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னுலைகள் அமைந்த எஃகுத் தொழிற்சாலைக்கான உயர் அழுத்த மின்னிணைப்பு முழு வேலை நிறுத்தத்திலோ, மூடலிலோ இருந்தால் அப்போது உண்மையில் நடப்பில் பதிவான மின்தேவை, ஆணையம் அவ்வப்போது அறிவிக்கும் வேலை நிறுத்தத்தில், மூடலில் உள்ள உலைகளின் ஒப்பளித்த கி.வோ.ஆ அளவில் உள்ள மின் தேவையின் விழுக்காடு இவற்றில் எது அதிகமோ அதைப் பட்டியலிடப் பயன்படுத்தும் நலத்தை உரிமதாரருக்குத் தர வேண்டும். கதவடைப்பு உள்ளபோது மேற்சொன்ன வழிவகை பொருந்தாது.

c) உரிமதாரரின் உரிமையின்படியோ அல்லது நுகர்வோரின் வேண்டுதலின் படியோ துண்டிக்கப்பட்டுள்ள தா.அ. மின்னிணைப்பைப் பொருத்தவரையில் உரிய மாதச் சிறுமக் கட்டணத்தை உரிமதாரர் இசைவுப் பத்திரம் முடிவுக்கு வரும் வரை வசூலிக்க வேண்டும்.

## 7. மின்னளவி நிறுவுதல்

(1) மின்னளவி பயன்பாடு பற்றிய விதி வகுக்கும் சட்டத்தின் சட்டப்பிரிவு 55 இன் துணைப்பிரிவு (i) பின்வருமாறு கூறுகிறது. " அமர்த்தப்பட்ட இரண்டாண்டுகள் முடிந்த பிறகு எந்த உரிமதாரரும் இது தொடர்பாக உரிய அதிகாரத்தால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின்படி சரியான மின்னளவியை நிறுவாமல் மின்சாரம் வழங்கக் கூடாது. நுகர்வோர் தானே மின்னளவி நிறுவ தேர்ந்தெடுத்தால் ஒழிய, மின்னளவி விலைக்கான காப்பு வைப்புத் தொகையைச் செலுத்தும்படி உரிமதாரர் நுகர்வோரிடமிருந்து கோரலாம் எனவும் மேலும் அதை மின்னளவி வாடகை இசைவுப் பத்திரத்திலும் பதியலாம் எனவும் விதிக்கப்படுகிறது.

மாநில ஆணையம், அறிக்கை மூலம், மேலே சொன்ன இரண்டாண்டு காலவரம்பை ஆணையறிவிப்பு குறிப்பிட்டுள்ள வட்டாரத்துக்கோ அல்லது தனி உரிமதாரர் வகைக்கோ அல்லது வகைகளுக்கோ நீட்டிக்கலாம் எனவும் விதிக்கப்படுகிறது.

(2) அனைத்துப் புதிய மின்னிணைப்புகளும் மின்னளவி வைத்தே தரப்பட வேண்டும். வீடு மற்றும் வேளாண்மை மின்னிணைப்பு வகைகளைத் தவிர, பிற அனைத்துத் தாழ் அழுத்த மின்னிணைப்புகளுக்கும், ஒப்பந்த மின் தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்கும் அதிகமாக அமையும்போது, மின்தேவை பதிவு செய்யும் ஏற்பாடுள்ள மின்னளவிகளையே பயன்படுத்த வேண்டும். ஏற்கெனவே நிலவும் மின்னிணைப்புகளுக்கு, ஒப்பந்தம் பெற்ற மின் தேவை 18.6 கி வா ( 25 பதி) அளவுக்கும் அதிகமாக இருந்தால் இந்த விதித்தொகுப்பின் 5 (2) ஆவது ஒழுங்குமுறைப்படி கூடுதல் மின்தேவைக் கட்டணத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உரிமதாரர் இவ்வகை ஏற்பாட்டை அமைக்க வேண்டும்.

(3) நுகர்வோரே தனது சொந்த மின்னளவியை வாங்கி வைக்க தேர்ந்தெடுத்தால் ஒழிய, உரிமதாரர் உயர் தரமும் உயர் துல்லியமும் உயர் சரித்தன்மையும் உள்ள மின்னளவியை நிறுவிட வேண்டும். அதற்காக அவர் நுகர்வோரிடம் மின்னளவியின் விலையளவுக்கு காப்பீடும் வாடகைக் கட்டணமும் தரும்படி கோரலாம். நுகர்வோர் தனது சொந்த மின்னளவியை வாங்கி வைக்க தேர்ந்தெடுக்கும் போது, உரிமதாரர், அம்மின்னளவி உயர் தரமும், உயர் துல்லியமும், உயர் சரித்தன்மையும் உள்ளபடி உறுதிப்படுத்துவதோடு நுகர்வோர் செலவில் அதை மீள் அளவீடு செய்ய ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

(4) வழக்கமாக பொறியாளர் எடுக்கும் முடிவுப்படி, நுகர்வோர் இருப்பிடத்தின் நுழைவாயிலில், தக்க, எளிதில் அணுகக்கூடிய இடத்தில் மின்னளவி நிறுவப்பட வேண்டும். மின்னளவியை நிறுவிய பிறகு நுகர்வோர் அல்லது அவரது சார்பாளர் முன்னிலையில், மின்னளவிப் பெட்டியின் மூடி, மின்னோட்ட மாற்றியின் அறை, மின்னளவி முனைய (terminals) மூடி, சோதனைக் கட்டை (test block) துணிப்பு அமைப்புகள் (Cutouts) காற்று வழி பிரிப்புத் திறப்பி (Air Break Switch) வாசல் கதவு மேலும் இவை போன்ற நிறுவிய பகுதிகளின் மீது காப்பு இலச்சினை பொருத்திட வேண்டும். மின்னளவியும் உரிய இலச்சினைகளும், திருடப்படவோ, சேதப்படவோ, உருக்குலைக்கப்படவோ ஆகாமல் பார்த்துக் கொள்ள நுகர்வோர் பொறுப்பேற்க வேண்டும். இந்த வழங்கல் புள்ளியில் இருந்துதான் நுகர்வோர் தனது மின்கம்பி அமைப்பை நீட்டிட வேண்டும்.

(5) அத்தகைய மின்னளவியால் பதிவு செய்யப்படும் மின்சார அளவு தான் உரிமதாரர் வழங்கிய மின்சார அளவாக எடுத்துக் கொள்ளப்படும்.

(6) உரிமதாரர் மின்னளவியைச் சோதித்ததும் மின்னளவிப் பெட்டியின் மூடியிலும் மின்னோட்ட மாற்றியின் அறையிலும் காப்பு இலச்சினைகளை வைப்பார். மின்னளவி முனைய மூடி (terminal cover of meter) (தா.அ. மற்றும் உ.அ. வகை) சோதனைப்பட்டை, மின்னளவி அணி, மின்னளவிப் பெட்டி, மின் துணிப்பு அமைப்புகள், காற்றுப் பிரிப்புத் திறப்பி, வாசல் கதவு மற்றும் பிறவற்றின் மீது, அதாவது உரிமதாரர் விரும்பும் இடங்களின் மீது நுகர்வோர் இருப்பிடத்தில் வைக்கப்படும் இலச்சினைகள் நுகர்வோரின் அல்லது அவரது சார்பாளரின் முன்னிலையில் வைக்கப்படும். அப்போது நுகர்வோர் காப்பு இலச்சினையுட்பட்ட அனைத்து இலச்சினைகளும் சரியாக உள்ளனவா என்பதையும் மின்னளவித் தட்டு நன்கு செயல்படுகிறதா என்பதையும் சரிபார்த்து மனநிறைவு கொள்ள வேண்டும். அதன் பிறகு இலச்சினைகள் சேதப்படாமலும் உருகுலைக்கப்படாமலும் பார்த்துக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

(7) உயர் அழுத்த மின்னிணைப்பின் தாழ் அழுத்தப் புறத்தில் மின்னளவி இருந்தால் அதாவது மின்மாற்றியின் துணைப்பக்கத்தில் இருந்தால்

i) மின்மாற்றியின் சராசரி இழப்பைப் பின்வருமாறு கணக்கிட்டு மின்னளவி பதிவு செய்யும் ஆற்றல் நுகர்வுடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.

$$\text{சராசரி இழப்பு} = \frac{720 \times 1.0 \times C}{100} \text{ மாதத்திற்கான மின்னலகுகள்}$$

இங்கு C – மின்மாற்றியின் கி.வோ.ஆ அளவில் உள்ள வரையளவு

ii) பதிவான நுகர்வு இல்லையென்றாலும் கூட மேற்சொன்ன வாய்பாட்டால் கணக்கிடப்பட்ட இழப்பைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

iii) உயர் அழுத்தப்புற மின் தேவைக்கான சம மதிப்பைப் பெற தாழ் அழுத்தப் பக்கத்தில் பதிவான பெரும மின் தேவையுடன் (Maximum Demand) 63 கி.வோ.ஆ அளவுக்கு மேல் நிறுவுதிறனுள்ள மின்மாற்றிகளுக்கு, மின்மாற்றியின் நிறுவுதிறனில் 1 விழுக்காட்டைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

(8) உரிமதாரர் குறிப்பிட்ட காலமுறையில், மின்னளவிகளை, செந்தர அளவைக் கருவிகள் (Standard meters) கொண்டு மறு அளவீடு செய்து, செந்தரப் படுத்த வேண்டும் என்றாலும், உயர் அழுத்த மின்னிணைப்பைப்

பொறுத்த வரையில் நுகர்வோர் வேண்டினால் அத்தகைய மறு அளவீடு செய்தலை நுகர்வோரின் அல்லது அவரது சார்பாளரின் முன்னிலையில் செய்ய வேண்டும். மின்னளவி பழுதுற்றோ அல்லது சரியற்ற அளவுடனோ இருந்தால், சட்டத்தின் உரிய விதிகளின் படியான வரம்புகளுக்கு அப்பால் உள்ள பிழையளவுக்குப் பட்டியலில் ஈடு செய்து தர வேண்டும்.

(9) நுகர்வோர் மின்னளவு பிழையுள்ளதாகக் கருதினால், அவரது மின்னளவிகள் மீது உரிய சிறப்பு சோதனைகளைச் செய்யும் படி உரிமதாரருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய சோதனைக்கான செலவை, அத்தகைய சோதனையின்போது மின்னளவி பழுதுற்று உள்ளதா அல்லது சரியாக உள்ளதா என்பதைப் பொருத்து, முறையே, உரிமதாரர் அல்லது நுகர்வோர் ஏற்க வேண்டும். சட்ட விதிகளில் உள்ள பிழை வரம்புகளைக்காட்டிலும் கூடுதலான பிழை இல்லாத போது, மின்னளவி சரியாக உள்ளதாகவே கொள்ளப்படும். உரிமதாரர் அவரால் மறு அளவீடு செய்யப்பட்ட பிறகே நுகர்வோரின் சரிபார்ப்பு மின்னளவியை அவரது இருப்பிடத்தில் நிறுவிட இசைவு தர வேண்டும். அத்தகைய சரிபார்ப்பு மின்னளவி உயர் தரமும், உயர் சரித்தன்மையும் உயர் துல்லியமும் உள்ளதாகவும் மேலும் உரிமதாரரின் காப்பு இலச்சினை பொருத்தப்பட்டும் இருக்க வேண்டும். உரிமதாரரின் மின்னளவி பழுதுற நேர்ந்தால், சரிபார்ப்பு மின்னளவி பதியும் மின்னளவை எடுத்துக் கொள்ளலாம்.

(10) பழுதுற்ற, சேதமுற்ற, எரிந்த மின்னளவிகளைப் பதிலிட பின்வரும் வழி முறையைப் பின்பற்ற வேண்டும்.

i) உரிமதாரர் அனைத்துப் பழுதுற்ற மின்னளவிகளையும் தனது செலவில் மாற்றப் பொறுப்புடையவராவர்.

ii) மின்னளவியின் காப்புப் பொறுப்பு நுகர்வோரிடம் உள்ளதால் சேதமுற்ற மின்னளவியை மாற்றும் பணி நுகர்வோர் செலவில் செய்யப்பட வேண்டும்.

iii) மின்னளவி எரிந்ததற்கான காரணம் நுகர்வோரே என நிறுவப்படாதவரையில் எரிந்த மின்னளவிகளை மாற்றிட வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும்.

iv) நுகர்வோர் தனது சொந்த மின்னளவியையே தொடர்ந்து வைத்திருக்கத் தீர்மானித்தால் அல்லது தேர்ந்தெடுத்தால் அவரது உரிமையிலிருந்த மின்னளவி பழுதுற்றாலோ, சேதமுற்றாலோ, நுகர்வோரைச் சார்ந்த காரணங்களால் மின்னளவி எரிந்துவிட்டாலோ சரியான மின்னளவியை மாற்றிட வேண்டியது நுகர்வோரின் பொறுப்பாகும். அப்படியல்லாவிட்டால், உரிமதாரர் மின்னளவியைத் தனது செலவில் மாற்றி விட்டு அதை மின்னளவி வாடகை இசைவுப் பத்திரத்தில் பதிவு செய்து உரிய குறிப்பிட்ட வைப்புத் தொகைகளை வசூலிக்க வேண்டும்.

8. மின்னளவியின் அளவு எடுத்தலும், பட்டியலிடலும் அவற்றுக்கான கால இடைவெளிகளும்.

(1) உரிமதாரர் விரும்பும் விரைவுடைய கால இடைவெளிகளில் தனது பணியாளர் மூலம் மின்னளவி அல்லது மின்னளவிகளின் அளவை எடுக்க வேண்டும். அப்படி அளவெடுக்க சட்டத்தின் 163 ஆவது சட்டப்பிரிவில் உள்ள விதி வகுப்புகளின்படி அவர்கள் நுகர்வோர் இருப்பிடத்துக்குள் காரணமுறைமைக் கியைந்த நேரங்களில் அணுக, நுழைய விட வேண்டும். நுகர்வோருக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து அடிப்படை தகவல்களையும் உள்ளடக்கிய மின்னளவி அட்டைகளின் படிவத்துக்கு ஆணையத்திடமிருந்து உரிமதாரர் ஒப்புதல் பெற வேண்டும். மின்னளவி அட்டையில் உள்ள அனைத்து விவரங்களையும் ஒன்று விடாமல் பதிவு செய்ய வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும்.

(2) உயர் அழுத்தமின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் ஒவ்வொரு பட்டியல் மாத முடிவுக்குப் பிறகுள்ள நான்கு நாட்களுக்குள், உரிமதாரர் ஒவ்வொரு நுகர்வோருக்கும் அவர் வழங்கிய மின்சாரத்துக்காக கட்ட வேண்டிய தொகையைக் குறிப்பிட்ட கட்டணப் பட்டியலை அளிக்க வேண்டும்.

(3) தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் உரிமதாரர் ஆணையத்துடன் கலந்து ஆலோசித்து ஒப்புதல் பெற்று மின்னளவி அளவெடுத்தல், வசூல் கெடு தேதிகள், வசூல் முறைமை (Mode) ஆகியன பற்றி முடிவெடுக்க வேண்டும். தற்காலிக மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் ஒப்பளித்த காலம் ஒரு மாதத்திற்கும் குறைவாக உள்ள போது அக்காலம் முடியும்போதும், கூடுதலாகவுள்ள போது, மாதத்துக்கொரு முறையும் மின்னளவை எடுக்க வேண்டும்.

(4) தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவின் கடைசி இலக்கம் ஒன்று முதல் ஐந்து வரையிலும் அதை உள்ளடக்கியதாகவும் உள்ள போது கீழ்ப் பத்தலகுப் பெருக்கலாகவும்

(lower multiple of ten units) கடைசி இலக்கம் ஆறு முதல் ஒன்பது வரை உள்ள போது மேல் பத்தலகுப் பெருக்கலாகவும் (higher multiple of ten units) கொள்ள வேண்டும்.

(5) தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவுகள் எடுத்த பிறகு, மின்னளவுகளின் விவரங்களும், ஆற்றல் நுகர்வும் செலுத்த வேண்டிய கட்டணமும் நுகர்வோர் அட்டையில் குறிக்கப்பட வேண்டும்.

(6) நுகர்வோர், வழங்கப்பட்ட மின் ஆற்றலுக்கான கட்டணத்தை, உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மேலே சொன்னபடி மின்னளவு எடுத்து அதற்கான பட்டியல் தரப்பட்டதும், செலுத்த வேண்டும். தாழ் அழுத்த மின்னிணப்புகளைப் பொருத்தவரையில் மின்னளவி அட்டையில் மின் நுகர்வுக் கட்டணத்தைப் பதிவு செய்ததுமோ அல்லது மதிப்பீட்டு கணக்குச் சீட்டை அளித்ததுமோ செலுத்த வேண்டும்.

(7) பட்டியலில் / மதிப்பீட்டில் உள்ள மொத்த மின்னோட்ட நுகர்வுக் கட்டணமும் மற்றபிற கட்டணங்களும் முழு ரூபாய்க்குச் சீர்படுத்தப்பட வேண்டும்.

(8) உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் உரிமதாரரின் பணியாளர், மின்னளவை, நுகர்வோர் அல்லது அவரது சார்பாளரின் முன்னிலையில் எடுக்க வேண்டும். மின்னளவு எடுக்கும் போது அவர் இருந்ததற்கான அடையாளமாக நுகர்வோர் அல்லது அவரது சார்பாளரின் கையொப்பத்தை மின்னளவி அட்டையில் பெறவேண்டும். அப்படி நுகர்வோர் அல்லது அவரது சார்பாளர் மின்னளவு எடுக்கும் போது உடனிருக்க மறுத்தாலோ அல்லது மின்னளவி அட்டையில் கையொப்பமிட மறுத்தாலோ அவ்வுண்மையை மின்னளவி அட்டையில் பதிவு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலும் மின்னளவுகளையும் நுகர்வையும் மின்னளவி அட்டையில் பதிவு செய்ய வேண்டும்.

(9) காற்றாலை உட்பட்ட தனியாரக ஏற்பாட்டு (Captive) மின்னாக்கத்தைப் பொருத்தவரையில், மின்னாக்கமும் மின் நுகர்வும் பதியத்தக்கபடி மின்னளவி அட்டைகளில் உரிய இடம் விடவேண்டும். உரிமதாரரின் பணியாளர், நுகர்வோர் அல்லது சார்பாளர் முன்னிலையில் மின்னளவுகளை எடுக்க வேண்டும். மின்னளவுகள் எடுக்கும் போது அவர் இருந்ததற்கு அடையாளமாக நுகர்வோரின் அல்லது அவரது சார்பாளரின் கையொப்பத்தை மின்னளவி அட்டையில் பெற வேண்டும். அப்படி மின்னளவுகள் எடுக்கும் போது நுகர்வோரோ அவரது சார்பாளரோ உடனிருக்கவோ அல்லது கையொப்பமிடவோ மறுத்தால் அத்தகவலையும் மின்னளவி அட்டையில் பதிவு செய்ய வேண்டும். அப்படிபட்ட நிலையிலும் மின்னளவுகளையும் மின் நுகர்வையும் மின்னளவி அட்டையில் பதிவு செய்ய வேண்டும்.

## 9. ஒப்பளித்த மின்தேவை போன்றவற்றில் மாற்றங்கள் உள்ளபோது மின்னளவியில் அளவெடுத்தல்

(1) ஒப்பளித்த மின் தேவையில் மாற்றம் ஏற்படும் போது, முடிந்தவரையில் அந்த மாற்றத்தை அடுத்த மின்னளவு எடுக்கும் காலத்தோடு ஒன்றும்படி நடைமுறைப்படுத்த வேண்டும். இருந்தாலும் அப்படி செய்ய முடியாதபோது, மின்னளவியை மீளமைப்புக்குக் கொண்டு வந்து, முறையே, உரிய கால இடைவெளிகளில் பதிவாகும் பெரும் மின் தேவைகளின் விகிதத்தில், அக்கால இடைவெளிகளுக்குரிய பெரும மின் தேவைக் கட்டணங்களை கணக்கிட வேண்டும்.

(2) மின்னிணைப்பில் கட்டண வீத மாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், அத்தகைய மாற்றங்களை திருத்திய சோதனை அறிக்கையைப் பெற்ற பிறகே, செய்ய வேண்டும். அப்போது எடுக்கப்படும் மின்னளவே வழங்கப்பட்ட மின்சாரத்துக்கான இறுதியான ஆதாரமாகும்.

## 10. மின்னளவை எடுக்க மின்னளவியை அணுக இயலாமை

(1) ஒரு தாழ் அழுத்த நுகர்வோர் உரிமதாரரின் தலைமை மின் வாயிலோடு இணைந்துள்ள தனது மின்னிணைப்பை உரிமதாரரின் பணியாளராய் அணுகமுடியாதபடி வைத்துவிட்டுச் சென்றுவிட்டால், இது போன்ற அணுக இயலாமை முதல் முறையாக நேர்ந்தால், அத்தகைய நுகர்வோருக்கு முந்தைய மாதம் மதிப்பிட்ட கட்டண அளவின் அடிப்படையில் தற்காலிகமாகக் கட்டணத்தை விதிக்க வேண்டும். உரிமதாரரின் பணியாளர் நுகர்வோரது இருப்பிடத்தில் முடிந்த இடத்தில் மதிப்பீட்டு அறிக்கைச் சீட்டை மறைவாக வைத்துவிட்டுச் செல்லலாம்.

(2) அடுத்த தடவை அந்த மின்னளவியின் மின்னளவை எடுக்க அணுக முடிந்தால், இரு கால இடைவெளிகளுக்குரிய சிறுமக் கட்டணங்களுக்கு குறையாதபடி, உண்மையில் நடப்பில் உள்ள

மின்னளவுக்கான கட்டணத்தில் தற்காலிகமாக முன்பு விதித்தக் கட்டணத்தைக் கழித்துவிட்டு நுகர்வோருக்கான கட்டணத்தை விதிக்க வேண்டும். அப்படியல்லாமல் இரண்டாவது முறையும் மின்னளவியை அணுக இயலாமல் போனால், உரிமதாரரின் பணியாளர் மின்னளவு எடுக்க ஏதுவாக இருப்பிடத்தைக் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் திறந்து வைக்கும்படி ஓர் 24 மணிநேர அறிவிப்பைத் தரவேண்டும். அப்போது மின்னளவியை அணுகத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டால், இருகால இடைவெளிகளுக்குரிய சிறுமக் கட்டணங்களுக்குக் குறையாதபடி, மின்னளவுப்படியான கட்டணத்தில் முன்பு விதித்த தற்காலிகக் கட்டணத்தைத் கழித்துவிட்டு நுகர்வோருக்கான கட்டணத்தை விதிக்க வேண்டும். 24 மணிநேர அறிவிப்புக்குப் பிறகும் மின்னளவு எடுக்க மின்னளவியை அணுக இயலாமற் போனால் மின் வழங்கலைத் துண்டித்து விட்டு முதல் முறை விதித்தது போலவே தற்காலிகக் கட்டணத்தை விதிக்க வேண்டும்.

(3) துண்டிப்புக்குப் பிறகு மின்னளவியை அணுக இயலும்படியான ஏற்பாடு செய்யப்பட்டால் நிகழ்விற்கேற்ப, அது மின்னளவியில் அளவெடுக்கவோ, அல்லவோ அல்லது கணக்கு சீர்பார்த்து நேர்செய்யவோ அல்லது மின்னிணைப்பை மீள இணைப்பதற்காகவோ எதற்கானாலும், இருகால இடைவெளிகளுக்குரிய மாதச்சிறுமக் கட்டணங்களுக்குக் குறையாதபடி, மின்னளவுப்படியான உண்மை நுகர்வுக்குரிய கட்டணத்தில் முந்தைய இருமுறை மின்னளவி அணுகவியலாத கால இடைவெளிகளில் விதிக்கப்பட்ட தற்காலிகக் கட்டணங்களைக் கழித்துவிட்டு, உடன் மீளிணைப்புக் கட்டணத்தையும் விதிக்க வேண்டும். கட்டப்பட்ட கூடுதல் தொகை ஏதேனும் மிஞ்சினால், அது எதிர்கால மின்னோட்டக் கட்டணத்தில் நேர்செய்து கொள்ளப்படும்.

(4) உரிமதாரரின் தலைமை மின்வாயிலில் இணைந்துள்ள உயர் அழுத்த மின் நுகர்வோர் தனது நிறுவல் அமைப்பின் மின்னளவியை உரிமதாரரின் பணியாளர் அணுகமுடியாதபடி வைத்துவிட்டுச் சென்றால், உரிமதாரரின் பணியாளர் நுகர்வோருக்கு குறிப்பிட்ட நேரத்தில் மின்னளவு எடுக்க அவரது இருப்பிடத்தைத் திறந்து வைக்கும்படி ஓர் 24 மணிநேர அறிவிப்பைத் தரவேண்டும். அதற்குப்பிறகு மின்னளவு எடுக்க வேண்டும். அறிவிப்பு தந்த 24 மணி நேரத்துக்குப் பிறகும் மின்னளவி அணுகமுடியாத நிலையிலேயே இருந்தால் அந்த இருப்பிடத்துக்கான மின்வழங்கலைத் துண்டித்துவிட்டு நுகர்வோருக்கு முந்தைய மாதம் விதிக்கப்பட்ட தொகையளவுக்குத் தற்காலிகக் கட்டணத்தை விதிக்க வேண்டும். துண்டிப்புக்குப் பிறகு மின்னளவியை அணுகும்படியான ஏற்பாடு செய்யப்பட்டால் , மாதச் சிறுமக் கட்டணத்துக்குக் குறையாதபடி, உண்மை நுகர்வுக்குரிய கட்டணத்தில் முன்பு விதித்த தற்காலிகக் கட்டணத்தைக் கழித்துவிட்டு நுகர்வோர் கட்டணத்தை விதிக்க வேண்டும். அனைத்து மீளிணைப்புகளுக்கும் மீளிணைப்புக் கட்டணத்தோடு பிற உரிய கட்டணங்களும் விதிக்கப்படவேண்டும்.

(5) மேலுள்ள துணைப்பிரிவுகளின்படி அறிவிப்புகள் தருவதை நுகர்வோர் இருப்பிடத்தில் தெளிவாய் தெரியும் இடத்தில் அதை ஒட்டிவைத்தும் நிறைவேற்றலாம்.

**11. மின்னளவி இல்லாத, மின்னளவு பழுதுற்ற நிலைகளில் பட்டியலிடுவதற்கு மதிப்பீடு செய்தல்.**

(1) நுகர்வோருக்கு மின்னளவி ஏதும் வைக்காமல் மின் வழங்கலைத் தந்திருந்தாலோ அல்லது பொருத்தப்பட்டுள்ள மின்னளவி பழுதுற்றோ அல்லது செயல்படாமலோ இருந்தாலோ, மின் ஆற்றல் திருட்டோ வேறுவிதி மீறலோ நடந்திருப்பதற்கான ஐயம் ஏதும் ஏற்படாத நிலையில், மின்னளவி நிறுவப்படாத அல்லது நிறுவிய மின்னளவி பழுதுற்ற நிலைமைகளில் அக்கால இடைவெளியில் வழங்கப்பட்ட மின்சார அளவை பின்வரும் முறைகளில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

(2) குறிப்பிட்ட உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்னிணைப்பு வகையினங்களுக்கு நிகழ்வில் கருதப்படும் கால இடைவெளியில் வழங்கப்பட்ட மின்சார அளவும், கருதப்படும் கால இடைவெளியில் உள்ள மின்சாரப் பயன்பாட்டுத் தன்மையும், முந்தைய நான்கு மாதங்களின் மின்சாரப் பயன் பாட்டுத் தன்மையிலிருந்து மாறுபடாமலிருக்கும் நிலையில் முந்தைய நான்கு மாதங்களில் நுகரப்பட்ட மின்சார அளவின் மாதச் சராசரி வீதத்தில் கணக்கிட வேண்டும்.

(3) உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், பெரும மின்தேவையை அளந்திடப் பொருத்திய அமைப்பு பழுதுற்றால் முந்தைய நான்கு மாத மின் தேவைகளின் சராசரி அடிப்படையில், பழுதுற்ற கால இடைவெளிக்கான பெரும மின் தேவையைக் கணக்கிட வேண்டும்.

(4) மின்னிணைப்பு தந்தவுடனே மின்னளவி பழுதுற்றால் சரியான மின்னளவி பொருத்திய பிறகுள்ள நான்கு மாதங்களில் வாங்கப்பட்ட மின்சார அளவின் சராசரி அடிப்படையில் அத்தகைய தாழ் அழுத்த மின்னிணைப்புகளில் மின்சாரப் பயன்பாட்டுத் தன்மை மாறுபடாத வரையில், பழுதுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மின்சார அளவைக் கணிக்க வேண்டும். மின்னளவி பழுதான காலத்திற்கு மாதக் குறைந்தபட்ச கட்டணத்தை

நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டும். மதிப்பீட்டிற்குப் பிறகு தற்காலிகமாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை நேர் செய்தபின்பு உண்மையான கட்டணம் வசூலிக்கப்படும்.

(5) கருதப்பட்ட கால இடைவெளிகளில் மின்சாரப் பயன்பாட்டுத் தன்மை வேறுபட்டால், முந்தைய 12 மாத இடைவெளியில் உள்ள ஒத்த பணி நிலைமை அல்லது தன்மை தொடர்ந்து நிலவும் நான்கு மாதங்களில் வழங்கப்பட்ட மின்சார அளவின் சராசரி அடிப்படையில் பட்டியலிடும் காலத்துக்கு மதிப்பீடு செய்ய வேண்டும்.

(6) அத்தகைய நான்கு மாதங்கள் அமைவதைத் தேர்ந்தெடுக்க முடியாவிட்டால், தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், பகிர்மானத்தின் பொறுப்பு வகிக்கும் பொறியாளராலும், உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், அதற்கடுத்த உயர்மட்ட அலுவலராலும், நுகர்வோரின் இணைந்துள்ள சுமை மின்சாரப் பயன்பாட்டு மணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட மின்சார அளவு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(7) நிகழ்விற்கேற்ப, பொறியாளராலோ அல்லது அதற்கடுத்த மட்ட அலுவலராலோ கணிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நுகர்வோர் இசைவு தராவிட்டால், நுகர்வோர் உரிமதாரரின் அடுத்த மட்ட அலுவலருக்கு அவரது வழக்கைக் கொண்டு செல்லலாம். அப்போது நுகர்வோர் மனநிறைவுறாவிட்டால், நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தை (Consumer Grievance Redressal Forum) அணுகிட உரிமையுண்டு.

12. **பட்டியலில் உள்ள பிழைகள் அல்லது தவறுகள்**

(1) உரிமதாரர் கட்டும்படி சொன்ன, கேட்ட அல்லது விதித்த தொகையில் எழுத்தர் பிழைகளோ, தவறுகளோ இருக்கும்போது குறைவாகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால் கூடுதல் கட்டணம் விதிக்க உரிமதாரருக்கு உரிமையுண்டு. அதேபோல் அதிகமாகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அதை மீளத் தரும்படி கேட்க நுகர்வோருக்கு உரிமையுண்டு.

(2) நுகர்வோருக்குக் கூடுதலாகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நிகழ்வுகளில், கட்டப்பட்ட கூடுதல் தொகையை எதிர்கால மின்னோட்ட நுகர்வுக் கட்டணங்களில் ஈடு செய்து தரவேண்டும். அப்படி எதிர்கால இரண்டு கணக்கீடுக் கால மின்னோட்டக் கட்டணங்களில் ஈடு செய்த பிறகும் இன்னமும் அதில் மீதம் இருந்தால் அதைக் காசோலையாக திருப்பித் தந்துவிட வேண்டும்.

(3) பட்டியலில் பிழைகள் உள்ளதாக நுகர்வோர்களிடமிருந்து உரிமதாரர் முறையீடுகள் பெற்றால், அத்தகைய முறையீடுகள் கட்டணஞ்செலுத்த வேண்டிய கடைசி நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பே பெற்றிருந்தால், வணிகப் பணப் பரிமாற்ற அளவு சார்ந்த தகராறுகளை கட்டணம் கட்ட வேண்டிய கடைசி நாளுக்குள் தீர்க்க வேண்டும். கட்டணஞ்செலுத்த வேண்டிய கடைசி நாளுக்கு முந்தைய மூன்பு நாட்களின் போது பெறும் முறையீடுகளை அடுத்த பட்டியலிடுவதற்கு முன்பு தீர்த்து ஈடுசெய்வதையோ திருப்பித் தருவதையோ அப்படியலிலேயே செய்ய வேண்டும். என்றாலும், நுகர்வோர் பட்டியல் பிழைகளைச் சாக்காகக் கொண்டு அல்லது காரணங்காட்டி தான் செலுத்த வேண்டிய கட்டணத்தில் பகுதி எதையும் நிறுத்தி வைக்கக் கூடாது.

13. **பட்டியல்கள் சார்பு செய்தல்**

(1) உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்கு, உரிமதாரர் பட்டியல்களை அஞ்சல் வழியாக அனுப்பவோ, நேரடியாகத் தரவோ செய்யலாம். அஞ்சல் போக்குவரத்து வழி இழப்புக்கு உரிமதாரர் பொறுப்பேற்க வேண்டியதில்லை. பட்டியலோ, மதிப்பீடோ வராமையால் கெடு தேதிக்குப் பிறகு தாமதமாகக் கட்டணம் செலுத்த நுகர்வோருக்கு உரிமையில்லை. தாழ் அழுத்த நுகர்வோர்களுக்கு, நுகர்வோர் மின்னளவி அட்டையில் செய்யும் பதிவே கேட்புக்கு நிகராகும். தனியாகப் பட்டியலேதும் அனுப்பப்பட மாட்டாது.

(2) வழக்கமான மின்னோட்ட நுகர்வுப் பட்டியல் தவிர்த்த பிற எந்த நிலுவைத் தொகைகளையும் பொருத்தமட்டில், உரிமதாரர் நுகர்வோருக்குத் தனியாக கடிதப் போக்குவரத்து மூலம் அறிவிக்க வேண்டிய கடப்பாடு உடையவராவார்.

14. **காலக்கெடு தேதிகளும் அறிவிப்புக் கால இடைவெளிகளும்**

(1) உரிமதாரர் மின்சாரம் சார்ந்த கட்டணத்தைச் செலுத்த பின்வரும் சிறும (Minimum) நாட்களைக் கெடு தேதிகளுக்கும் அறிவிப்புக் கால இடைவெளிகளுக்கும் தருதல் வேண்டும்.

(a) தாழ் அழுத்த மின்னிணைப்புகளுக்கு, கெடு தேதி மின்னளவி அட்டையில் பதிவு செய்த பிறகு 5 நாட்களுக்குக் குறையாமலும், கட்டணம் செலுத்தாமைக்காகத் துண்டிப்பு செய்வதற்கான அறிவிப்பு கால

இடைவெளியாக தெளிவான முழு (clear) 15 நாட்களும் தரவேண்டும். அறிவிப்புக் கால இடைவெளிக்குத் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் ஏதும் விதிக்க கூடாது.

(b) உயரழுத்த மின்னிணைப்புகளுக்குக் கெடு தேதி பட்டியலிட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குக் குறையாமல் தர வேண்டும். கெடு தேதி விடுமுறை நாளாக அமைந்துவிட்டால் அதைக் கெடு தேதியின் மறுநாள் வரை நீட்டிக்க வேண்டும். கட்டணம் செலுத்தாமைக்கான துண்டிப்புக்கு முன்பு தெளிவான முழு 15 நாட்கள் அறிவிப்புக் கால இடைவெளி தரவேண்டும். விதிமுறையில் குறிப்பிட்டபடி உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்கு, அறிவிப்புக் கால இடைவெளிக்கும் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் விதிக்க வேண்டும்.

(2) நுகர்வோர் மின்னளவி அட்டையில் உரிமதாரர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தைச் செலுத்தாத தாழ் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில், மின்னளவி அட்டையில் உள்ள அறிவிப்புக்கால இடைவெளியே நுகர்வோருக்கான கட்டணம் செலுத்துவதற்கான அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். அறிவிப்புக் கால இடைவெளியில் கட்டணத்தைச் செலுத்தினால் அதைப் பெற்றுக் கொள்ளலாம். அறிவிப்புக் கால இடைவெளியின் கடைசி நாள் விடுமுறை நாளாக அமைந்துவிட்டால் அறிவிப்புக் கால இடைவெளி நீட்டிக்கப்பட்டு, துண்டிப்புத் தவிர்ப்பதற்குக் கட்டணம் செலுத்தும் கடைசி நாள் அடுத்த பணிசெய்யும் நாளாக அமைய வேண்டும்.

(3) மேற்குறிப்பிட்டபடியான அறிவிப்புக் கால இடைவெளி முடிவுற்றதும் தாழ் அழுத்த நுகர்வோர்களின் மின் வழங்கல் துண்டிக்கப்படும்.

(4) உயர் அழுத்த நுகர்வோர்களுக்குத் தந்த பட்டியல்படியும் தாழ் அழுத்த நுகர்வோர்களின் மின்னளவி அட்டையில் பதிந்த கட்டணப்படியும் உள்ள கட்டணம், இந்த விதித்தொகுப்பில் விதித்துள்ளபடி, தேவைப்பட்டால், தாமதமாகக் கட்டுவதற்குரிய தா.செ.உ.க தொகையுடன் செலுத்தப்படவேண்டும்.

(5) குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகும் ஏதேனும் பட்டியல் தொகை செலுத்தப்படாமலிருந்தால், உரிமதாரர், நுகர்வோருடன் செய்துக் கொண்ட இசைவுப் பத்திரத்தில் உள்ள அவருக்குரிய உரிமைகள் எதற்கும் குந்தகமேதும் இல்லாமலும், உரிமதாரர், மேலும் அறிவிப்பேதும் தராமலும் உடனடியாக மின்னிணைப்பைத் துண்டிக்கும்படி ஆணையிட்டு நிலுவையில் உள்ள அனைத்துக் கடப்பாடுகளையும் துண்டித்து மீளிணைப்பு செய்வதற்கான கட்டணத்தையும் சேர்த்துக் கட்டும்வரையில், மின்னிணைப்புகளில் ஏற்படும் தொடர்ச்சியின்மை, மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியமையிலிருந்து விடுவிக்க இங்கு விதித்திருக்கும் உரிமதாரரின் உரிமையையோ, கோரலையோ கேட்பையோ அல்லது அதிகாரம் எதையுமோ கட்டுப்படுத்தாது.

## 15. கட்டணம் செலுத்தும் முறைமை (Mode)

(1) நுகர்வோரிடமிருந்து பெறும் ஒவ்வொரு கட்டணத்துக்கும் தொகைக்கும் உரிமதாரர் உரிய பற்றுச் சீட்டை (Receipt) வழங்கவேண்டும்.

(2) உரிமதாரர் பட்டியல் தேதியிலிருந்து விதித்த கெடுதேதிக்குள் பல்வகைக் கணக்குவகை உட்பட்ட அனைத்து உயர் அழுத்தப் பட்டியல்களும் செலுத்தப்பட வேண்டும். நுகர்வோர் பட்டியல் தொகையைக் காசாகவோ, பொறியாளரின் தலைமையகத்து வங்கிக் கேட்பு வரைவாகவோ (Demand Draft) காசோலையாகவோ கட்டவேண்டும். ரூ.2000/— அளவுக்கு மேலான தொகைகள் காசோலையாகவோ, கேட்பு வரைவாகவோ கட்டுதல் விரும்பப்படுகிறது. சூழ்நிலைமையைப் பொருத்து ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் பொறியாளர் காசைப் பெற்றுக் கொண்டு, இனிவருங்காலத்தில் காசோலையாக அல்லது கேட்பு வரைவாக மட்டுமே தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளலாம். காசோலை திருப்பப்பட்டு விட்டதற்காகவோ அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவோ உயர் அழுத்தப் பட்டியல்களை இனிவருங்காலத்தில் உயர் அழுத்த நுகர்வோர் காசாக அல்லது கேட்பு வரைவாக மட்டுமே செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படலாம். பணம் செலுத்த தரப்பட்ட 15 நாள் (அறிவிப்புக் கால இடைவெளி) கெடு தேதிக்குள் பணம் பெறப்படாவிட்டால் மின் வழங்கல் துண்டிக்கப்படும் என்றாலும், இந்த விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய அதிகார அமைப்புக்கு விண்ணப்பம் தந்து நுகர்வோர் வேண்டிக்கொண்டால் பணம் செலுத்தத் தரப்பட்ட அறிவிப்புக் கால இடைவெளிக்குப் பிறகும் தாசெஉக தொகையுடன் பணம் செலுத்த நுகர்வோருக்குக் கால நீட்டிப்பு தரப்படலாம்.

(3) தாழ் அழுத்த நுகர்வோர்கள் செலுத்த வேண்டிய தொகையைக் காசாகவோ, உள்ளூர் வங்கியின் கேட்பு வரைவாகவோ, பகிர்மானப் பிரிவு அலுவலகம் உள்ள இடத்தமைந்த வங்கியில் பெற்ற காசோலையாகவோ, பணவிடையாகவோ கட்டவேண்டும் என்றாலும் உள்ளாட்சி அமைப்புகளும் இருப்புப்பாதை (இரயில்வே) அமைப்புகளும் அவை அமைந்த இடத்தில் உள்ள வங்கிக் காசோலைகளாகத் தரலாம். உரிமதாரர் அவற்றை மாற்றுவதற்கான கட்டணத்தைத் தேவைப்பட்டால் கோரிப் பெறலாம். ரூ.2000/— அளவுக்கும் மேலான தொகை காசோலையாகவோ, கேட்பு வரைவாகவோ மட்டுமே பெற விரும்பப்படுகிறது. சூழ்நிலைக்கேற்ப

காசாகச் செலுத்துவதைப் பொறியாளர் குறிப்பிட்ட நிகழ்வில் ஏற்றுக் கொண்டு நுகர்வோர் எதிர்காலத்தில் கட்டுந் தொகைகளைக் காசோலையாகவோ, கேட்பு வரைவாகவோ மட்டுமே தரும்படி அறிவுறுத்தலாம். காசோலை திரும்பி வந்து விட்டதற்காகவோ அல்லது வேறு எத்தகைய காரணங்களுக்காகவோ பணவிடையாகவோ, கேட்பு வரைவாகவோ மட்டுமே கட்டும்படி கேட்டுக் கொள்ளலாம். தாழ் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில், நுகர்வோர்கள் அவர்களது கடைசி மூன்று தொடர்ந்தமைந்த பட்டியல் கால இடைவெளிகளும் உயர் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்த வரையில் மூன்று மாதங்களும் மின்னோட்ட நுகர்வுக் கட்டணம் கட்டும் செயல்பாட்டைக் கண்காணித்த பிறகு பணஞ்செலுத்தலைக் காசோலை வழி காட்டும் சலுகைக்கு மீள ஒப்புதல் தர உரிமதாரருக்கு அதிகாரம் உண்டு. உரிமதாரர் மேற்சொன்னபடி நுகர்வோர்களின் பணஞ்செலுத்தும் செயல்பாட்டைக் கவனித்துவிட்டு காசோலைச் சலுகையை இரண்டாவது முறையாகவும் வழங்க அதிகாரம் உண்டு. அத்தகைய நுகர்வோர்கள் பின்வருபவற்றோடு திருப்பப்பட்டுவிட்ட காசோலைக்காக ஆணையம் விதிக்கும் சேவைத் தொகையையும் (service charges) கட்ட வேண்டும்.

(a) தாழ் அழுத்த நுகர்வோர்கள் ரூ.500/– அளவுக்கும் குறையாமல் திரும்பப் பட்டுவிட்ட காசோலைத் தொகையில் 1 விழுக்காடு அளவுக்கு கூடுதல் சேவைக் கட்டணம்.

(b) உயர் அழுத்த நுகர்வோர்கள் ரூ.1000/– அளவுக்கும் குறையாமல் திரும்பப்பட்டுவிட்ட காசோலைத் தொகையில் 1 விழுக்காடு அளவுக்கான கூடுதல் சேவைக் கட்டணம்.

(c) அதற்குப் பிறகு (இரண்டாவது முறைக்குப் பிறகு) காசோலையாக வழங்குதலுக்கான மீட்புச் சலுகை எக்காரணங்கொண்டும் அத்தகைய மின்னிணைப்புக்குத் தரக்கூடாது.

**16. முன்கூட்டியே கட்டணம் செலுத்தலைத் தேர்ந்தெடுத்தல்**

நுகர்வோர்கள் மின்சாரக் கட்டணங்களுக்காக முன்கூட்டியே வைப்புத்தொகையைத் தர தேர்ந்தெடுத்தால் அதற்கு அவர்களுக்கு இசைவு தர வேண்டும். அத்தகைய வைப்புத் தொகைகளை மின்னளவி அட்டையில் பதிவு செய்ய வேண்டும்.

**17. மின் வழங்கலுக்கான இசைவுப் பத்திரம், கட்டணங்களை மீட்பது பற்றிய விவரங்கள்**

**(1)** ஒவ்வொரு நுகர்வோரும் உரிமதாரருக்கு மின்வழங்கல் தொடங்கிய தேதியிலிருந்து இசைவுப்பத்திரம் முடிக்கப்படும் வரையில் அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஆணைகள், இவ்விதித்தொகுப்பு மற்றும் கட்டணவீத ஆணைகள், ஆகியவற்றில் விதிக்கப்படும் காப்புவைப்புத் தொகை, மாதச் சிறுமக் கட்டணம், நிலையான கட்டணங்கள் அப்படி ஏதேனும் இருந்தால் மற்றும் பிற கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்த வேண்டும்.

**(2)** நுகர்வோர் இசைவுப்பத்திரம் முடிப்பதைப் பொருட்படுத்தாமல் உரிமதாரருக்குத் துண்டிப்பு நாளன்றுள்ள மின்னோட்ட நுகர்வுக் கட்டண நிலுவைகளையும், பிற கட்டணங்களையும் மின்னளவு வாடகை உட்பட, இசைவுப் பத்திர முடிப்பு தேதி வரையிலும், தாமதச் செலுத்த கூடுதல் சேவைக் கட்டணத்தைப் பணம் இறுதியாகச் செலுத்தும் தேதி வரையிலும் செலுத்த வேண்டும்.

**(3)** இசைவுப் பத்திரம் நடப்பில் உள்ள போது நுகர்வோர் தனது மின்வழங்கல் தரப்பட்ட அல்லது அப்படித் தரப்பட ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்ட இருப்பிடத்தை அல்லது வணிகச் செயல்முறையை, மொத்தமாகவோ, பகுதியாகவோ, விற்கவோ, உரிமை மாற்றவோ, வாடகைக்கு விடவோ விரும்பினால், அத்தகைய விருப்பத்தை உரிமதாரரின் பொறியாளருக்கு மூன்று மாத அறிவிப்பு மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படலாம். மேலும் அத்தகைய விற்பனை / உரிமை மாற்றம் / வாடகை விடுதல் தேதி வரையிலான அனைத்து நிலுவைகளையும் கட்டும் படியும் கேட்டுக் கொள்ளப்படலாம். அத்தகைய அறிவிப்புகள் தரப்பட்டால் நுகர்வோரைப் பொருத்தவரையிலான இசைவுப் பத்திர நடைமுறைக்காலம், இப்பத்திரத்தின் கீழ் திரளும் உரிமை கோரல் எதற்கும் குந்தகம் விளைவிக்காமல், அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து முடிவுக்கு வந்துவிடும்.

**(4)** மேற்சொன்னபடி தனக்கு மின் வழங்கல் தரப்பட்ட அல்லது தான் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள இருப்பிடத்தை வணிகச் செயல்முறையை, விற்கவோ, உரிமை மாற்றவோ, வாடகைக்கு விடவோ கருதும் எண்ணத்தை அறிவிப்பு மூலம் அறிவிக்காவிட்டால், அப்படி விற்கப்பட்ட அல்லது உரிமை மாற்றப்பட்ட அல்லது வாடகைக்கு விடப்பட்ட தேதிக்குப் பிறகும் இசைவுப் பத்திரப்படி நுகர்வோர் கட்டவேண்டிய நுகர்வுக் கட்டணத்தையும் சார்ந்த பிற கட்டணங்களையும் அவரிடமிருந்து மீட்க உரிமதாரருக்கு உரிமையுண்டு.

**(5)** உரிமதாரருக்குக் கட்டவேண்டிய நிலுவைகளைச் செலுத்தாமைக்காக மூன்று மாதக் காலமாகத் துண்டிப்பில் இருந்தால், அறிவிப்பு பெற்ற மூன்று மாதங்களுக்குள் மின் வழங்கலை மீள இணைத்துக் கொள்ள

கோரியும், அப்படி மீள இணைத்துக் கொள்ளாத நிலையில் இசைவுப் பத்திரம் அதற்குப் பிறகு தானே முடிவுக்கு வந்துவிடும் என்றும் உரிமதாரர் ஓர் அறிவிப்பை நுகர்வோருக்குத் தரவேண்டும். அம்மூன்றுமாதக் கால அறிவிப்பு முடிந்ததும் இசைவுப்பத்திரம் முடிவுக்கு வந்தாகிவிடும்.

**18. நுகர்வோர் குறை தீர்ப்பு**

நுகர்வோரின் அனைத்துக் குறைகளும், இந்த விதித்தொகுப்பில் விதித்துள்ள ஒழுங்குமுறை விதிகள் (3) முதல் (17) வரையிலான பிரிவுகளின் கீழ் அமைந்தவற்றை நுகர்வோரால் உரிய நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தின் பார்வைக்கு அவர்களால் கொண்டு செல்லப்பட வேண்டும்.

**19. அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாடு – புலனாய்வு மற்றும் அமலாக்கம் பற்றிய வழிவகைகள்**

சட்டத்தின் 126 ஆம் சட்டப்பிரிவு அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாட்டுக்கான புலனாய்வு மற்றும் அமலாக்கம் பற்றிய வழிவகைகளை பின்வருமாறு கூறுகிறது.
<u>மதிப்பீடு</u>

(1) ஏதாவதொரு தனியொருவருக்குரிய ஏதேனும் இடத்தையோ அல்லது இருப்பிடத்தையோ ஆய்வு செய்தபிறகோ அல்லது இணைந்துள்ள அல்லது பயன்பாட்டில் உள்ள அவரது சாதனங்களையோ, பயன்கருவிகளையோ (appliances), எந்திரங்களையோ, ஏற்பாட்டமைப்புகளையோ (Devices), ஆய்வு செய்தபிறகோ அல்லது அவர் வைத்திருக்கும் ஆவணங்களைப் ஆய்வு செய்த பிறகோ மதிப்பீட்டு அலுவலர் அத்தனியொருத்தர் அதிகாரமற்ற முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக முடிவுக்கு வந்தால் அவரால் அல்லது அந்தப் பயன்பாட்டால் நலம் பெற்றவரால் உரிய மின்சாரக் கட்டணத்தை அவ்வலுவலரது நேர்மையான எண்ணத்திற்கெட்டியபடி தற்காலிகமாக மதிப்பீடு செய்யலாம்.

(2) அத்தகைய தற்காலிக மதிப்பீட்டை இருப்பிடத்தில் உள்ள இடத்தைப் பொறுப்பில் அல்லது உரிமையில் அல்லது இருப்பில் வைத்திருக்கும் அத்தனியொருவருக்கு அறிவிக்க வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2) இன் படி அறிவிப்புத் தரப்பட்டவர் தற்காலிக மதிப்பீடு குறித்து ஏதாவது மறுப்புகள் இருந்தால் அவற்றை மதிப்பீட்டு அலுவலரிடம் அறிவிக்க உரிமையுண்டு. அதற்கு அவர் போதுமான கேட்பு வாய்ப்பை நல்கிய பிறகு அத்தனியொருத்தரால் கட்டப்படவேண்டிய தொகைக்கான இறுதி மதிப்பீட்டு ஆணையைத் தருவார்.

(4) தற்காலிக மதிப்பீடு தரப்பட்ட எந்தத் தனியொருத்தரும் அந்த மதிப்பீட்டை ஏற்று உரிமதாரரிடம் மதிப்பிட்ட தொகையை அவரிடம் தற்காலிகமான மதிப்பீடு தரப்பட்ட ஏழு நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவர் மதிப்பீட்டுத் தொகையைக் கட்டிவிட்டால் அவர் மீது எந்த பிற கடப்பாடோ நடவடிக்கையோ எந்தவொரு அதிகாரத்தாலும் ஆட்படுத்தப்படக்கூடாது.

(5) மதிப்பீட்டு அலுவலர் அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாடு இருப்பதாக முடிவுக்கு வந்துவிட்டால், அந்த இடத்தின் அல்லது இருப்பிடத்தின் உரிமையுள்ளவர் அல்லது தன்னிடம் பொறுப்பில் வைத்துள்ளவர் மறுப்பு உள்ளதாக அறிவிக்காதபோது, வீட்டு மற்றும் வேளாண்மை மின்னிணைப்புகளை பொருத்தவரையில் ஆய்வு செய்த தேதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்பிலிருந்தே அத்தகைய அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நிலவியதாகவும், பிறவகைக் கட்டணவீத மின்னிணைப்புகளுக்கு ஆய்வு செய்த தேதிக்கு ஆறுமாதங்களுக்கு முன்பிலிருந்தே அத்தகைய அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாடு நிலவியதாகவும் கொள்ளப்படும்.

(6) இதன்படியான மதிப்பீடு சட்டத்தின் துணைப்பிரிவு (5) இல் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்புகளுக்கான கட்டண வீதங்களின் ஒன்றரை மடங்கு வீதத்தில் விதிக்கப்படும்.
<u>**விளக்கம்**</u>

(a) ’மதிப்பீட்டு அலுவலர்’ என்பது நிகழ்விற்கேற்ப, மாநில அரசால் வகுத்தளிக்கப்பட்ட, மாநில அரசின் அல்லது வாரியத்தின் அல்லது உரிமதாரரின் அலுவலரைக் குறிக்கும்.

(b) ’அதிகாரமற்ற மின்சாரப் பயன்பாடு’ என்பது

- i) எந்தச் செயற்கையான வழிவகையாலோ
- ii) உரிய தனியொருவராலோ, அதிகாரத்தாலோ, உரிமதாரராலோ அதிகாரம் தரப்படாத வழிவகையாலோ
- iii) நிலைகுலைக்கப்பட்ட மின்னளவி மூலமாக
- iv) மின்சாரம் பயன்படுத்த அதிகாரம் தரப்பட்ட நோக்கத்துக்குப் புறம்பான வேறு நோக்கத்துக்கோ

மின்சாரத்தைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது.

**20.** **சட்டத்தின் 127 (1) ஆவது சட்டப் பிரிவின்படியான மேல்முறையீடு**

**(1)** சட்டப் பிரிவுப்படிக்கான மேல்முறையீட்டு அலுவலருக்குத் தரும் ஒவ்வொரு மேல் முறையீடும் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) தொகைக்கான கேட்பு வரைவுடன் படிவம் **(6)** இல் தரப்பட வேண்டும்.

**(2)** மேல்முறையீட்டுத் தாக்கீதைச் சரிபார்த்தல்

(a) மேல் குறிப்பிட்டபடி பார்வைக்குக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு மேல்முறையீட்டுத் தாக்கீதும் ஒரு உறுதி மொழிப் பத்திரத்தால் சரிபார்க்கப்படவேண்டும். அத்தகைய உறுதி மொழிப்பத்திரம் ஒவ்வொன்றும் படிவம் **(7)** இல் அமைய வேண்டும்.

(b) ஒவ்வொரு உறுதிமொழிப்பத்திரமும் (affidavit) தன்மையில் (first person) வரையப்படவேண்டும். அதில் வாதியின் (deponent) முழுப்பெயர், வயது, பணி, முகவரி ஆகியவையும் அவர் எந்த அதிகார முகமைவகையில் கையெழுத்திடுகிறார் என்பதும் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். மேலும் அந்த உறுதிமொழிப் பத்திரம் பெற்று ஏற்றுக் கொள்ளும் சட்டநிலை அதிகாரம் படைத்தவர் முன்னிலையில் கையொப்பமிட்டு அவை அறநிலை வழுவாத உண்மை வாய்ந்தனவென உறுதிப்படுத்த வேண்டும்.

(c) ஒவ்வொரு உறுதி மொழிப் பத்திரத்திலும் தெளிவான

i) வாதியின் நம்பிக்கைக்குட்பட்ட
ii) வாதியின் அறிவுக்கெட்டிய
iii) வாதியால் பெறப்பட்ட தகவல்

ஆகிய வகைப்பட்ட தனித்தனி தகவல் வகைக்குரிய கூற்றுக்கள் (statements) அமைய வேண்டும்.

(d) உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள வாதியால் பெறப்பட்ட எத்தகவல் பற்றியும் அத்தகவல் கிடைத்த வாயிலும் (source) அது உண்மைதானென வாதி நம்புதலுக்கான தனியொரு கூற்றும் அதில் அமைய வேண்டும்.

**(3)** மேல்முறையிட்டு அலுவலர் ஆணையளித்த பிறகு மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த தவறினால் அவர் அத்தொகையுடன் கூட ஆணை வழங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிந்ததும் ஆண்டுக்குப் பதினாறு விழுக்காடு மேனியில், ஆறுமாதமொருமுறை வட்டிக் கணக்கிட்டுத் திரளும் வட்டித் தொகையும், அப்படிப்பட்ட கூட்டு வட்டி வீதத்தில் செலுத்த வேண்டும்.

## அத்தியாயம் 3 – மின்வழங்கல் துண்டிப்பும் மீட்டுத்தரலும்

**21.** **மின்வழங்கல் துண்டிப்பு**

சட்டத்தின் **56** ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.

"**(1)** அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling) தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிலுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) **15** நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும் அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய, பகிரிந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்புத் துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல் நீடிக்கக் கூடாது.
எனினும் மறுப்பு தெரிவித்துவிட்டு, உரிய தனியொருவர் பின்வரும் வகை வைப்புத் தொகைகளைச் செலுத்தியிருந்தால் மின்சார வழங்கல் துண்டிக்கப்படக்கூடாது.

a) அவரிடம் கோரப்பட்ட தொகைக்கீடான பணம்

b) முந்தைய ஆறுமாத மின்கட்டண அடிப்படையிலான மாதச் சராசரிப்படியமைந்த நிலுவைத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகையைக் கட்டியிருந்தால் அவருக்கும்

உரிமதாரருக்கும் இடையிலான தகராறு தீரும்வரை மின்வழங்கல் தொடரப்பட வேண்டும்.

(2) தற்போது நடப்பில் உள்ள பிற சட்டத்தில் இது குறித்து எவை உள்ளடங்கியிருந்தபோதிலும், எந்த ஒரு தொகையும், எந்தவொரு நுகர்வோரிடமிருந்தும் முதலில் கட்ட வேண்டிய தேதியிலிருந்து தொடர்ந்து, மின் வழங்கலுக்காக, பாக்கிக் கட்டணமாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இந்தப்பிரிவின்படி வசூலிக்கப்படக்கூடாது. உரிமதாரர் அத்தகைய சூழலில் மின் வழங்கலைத் துண்டிக்கக் கூடாது."

சட்டத்தின் மேற்குறிப்பிட்ட சட்டத் துணைப்பிரிவு (1) இன்படியான விதி வகுப்பை, நடப்பில் உள்ள வேறு சட்ட விதிமுறைகளுடன் சேர்ந்து செயல்படுத்த வேண்டுமே ஒழிய தவிர்த்துவிட்டோ, புறக்கணித்து விட்டோ நடைமுறைப்படுத்தக் கூடாது. இதன்படி உரிமதாரர் நீர் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1974, காற்று (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1981 மேலும் சுற்றுச்சூழல் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1986 போன்ற பிற சட்ட விதிகளின் ஆட்சிக்குட்பட்டே மின் வழங்கலை துண்டித்தலைச் செய்யவேண்டும்.

## 22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (Restoration)

(1) மின் கட்டணத்தையோ அது போன்ற பிற தொகையையோ உரிமதாரருக்கு, துண்டித்து மீள இணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டியதும், உரிமதாரர் உடனடியாகவும் அப்படி முடியாத நிலையில், 12 மணி நேரத்துக்குள்ளும் மின் வழங்கலை மீளத் தரவேண்டும்.

(2) மின்னிணைப்பு ஆறு மாதங்களுக்கும் மேல் துண்டிப்பில் இருந்துவிட்டால் நுகர்வோரின் நிறுவல் அமைப்புகள் சோதிக்கப்பட்டுத் திருத்திய சோதனை அறிக்கையைப் பெற வேண்டும். மேலும் மின்னிணைப்பை மீளத்தரும் முன்பு சோதனைக் கட்டணத்தையும் நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

(3) ஓர் ஆண்டிற்கோ அல்லது அதற்கும் மேலாகவோ துண்டிப்பில் இருந்த உயர் அழுத்த மின்னிணைப்பை மீளத்தரும் முன்பு நிறுவல் அமைப்பின் பாதுகாப்பு மற்றும் பொருள் காப்பு தொடர்பாக உரிய அதிகாரியிடமிருந்து ஒப்புதலைப் பெறவேண்டும்.

(4) துண்டிப்பில் இருந்த மின்னிணைப்புகள் தொடர்பான நிலுவைகள் வசூலிப்பதற்குத் தக்க நிகழ்வுக்கு தவணையில் செலுத்த அனுமதிக்க உரிமதாரருக்கே அதிகாரம் உண்டு.

(5) உரிமதாரர் துண்டிப்பில் இருந்த மின்னிணைப்பை இசைவுப் பத்திர முடிப்பு அறிவிப்புக்கு முன்பு மீளத் தரவேண்டும் அல்லது இசைவுப் பத்திர முடிப்பு அறிவுப்புக்கால இடைவெளியின் போது, மின்னிணைப்பு மீட்டுத் தருங்காலம் வரையிலான மொத்த நிலுவைத் தொகைகளையும் வசூலித்த பிறகே தரவேண்டும்.

(6) மின்சாரக் கட்டணம் செலுத்தாமைக்காக மூன்று மாத அறிவிப்புக் காலத்துக்கப்பாலும் துண்டிப்பில் இருக்கும் மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் நுகர்வோர் நடப்பு நிலுவைத் தொகைகளைக் கட்டுவதோடு, உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்குரிய மாதச் சிறுமக் கட்டணத்தையும், இசைவுப் பத்திர முடிப்பு அறிவிப்புக்குப் பிறகு துண்டிப்பில் இருந்த காலத்துக்கும் உரிய மீளிணைப்பு கட்டணத்தோடு கட்டமுன்வருவாரானால், உரிமதாரர் அத்தகைய அறிவிப்புக் காலக் கெடுவுக்குப் பிறகும் கால நீட்டிப்பை வழங்கி, இசைவுப்பத்திர முடிப்பு அறிவிப்பை மீளப்பெற்றுக் கொண்டு, மீளிணைப்பு தரமுடிந்தபடி மின்னிணைப்பு தரும் மின் தொடர் அவிழ்த்துப் பிரிக்கப் படாமலிருந்தால், மின்னிணைப்பை மீட்டுத்தரலாம்.

(7) துண்டிப்பில் இருந்த மின்னிணைப்பின் நுகர்வோர்கள், துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து, உயர் அழுத்த மின்னிணைப்பிகளைப் பொருத்தவரையில் 5 ஆண்டுகளுக்குப் பிறகும், தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் 2 ஆண்டுகளுக்குப் பிறகும் மீளிணைப்பு தரும்படி கேட்டால், உரிமதாரர் அவர்களைப் புதிய விண்ணப்பதாரர்களாகக் கருதி, புதிய மின்னிணைப்புக்கான அனைத்துக் கட்டணங்களோடும் அனைத்து

நிலுவைத் தொகைகளோடும் தாமதச் செலுத்த உபரிக் கட்டணத்தையும் சேர்த்துப் பெற்ற பிறகே மின் வழங்கல் தரவேண்டும்.

**(8)** நுகர்வோரின் வேண்டுதலின் பேரில் மின்சாரக் கட்டணத்தைத் தவணைகளில் செலுத்தச் சலுகை வழங்கலாம். இச்சலுகையைப்பெற இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்புப் படிவம் **(5)** இன்படியான உறுதியேற்பைத் தரவேண்டும்.

## அத்தியாயம் 4 – மின் எந்திரத் தொகுதி, மின்னளவி போன்றவற்றுக்கு நிலை குலைப்பு, இடுக்கண் அல்லது சேதம் உண்டாக்கல்

**23.** சட்டத்தின் **135** முதல் **141** வரையிலானச் சட்டப்பிரிவுகளில் நிலைக்குலைப்பு, இடுக்கண் போன்றவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகக் கூறப்படுகிறது. எனவே இவ்விதித்தொகுப்பில் நுகர்வோருக்கு மின் வழங்கல் பற்றிய தொகுப்பானத் தகவலைத் தரவும் விதித்தொகுப்பின் முழுமையைக் கருதியும் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாட்டுக் கூறுகள் அல்லது விதி வகுப்புகள் ஆயத்தமான உடனடிப் பார்வைக்காக இங்கே மீளத் தரப்படுகின்றன.

(A) **மின்னளவி நிலைகுலைப்பும் மின்சாரத் திருட்டும்**

**1)** சட்டத்தின் **135** ஆவது சட்டப்பிரிவு மின் திருட்டு பற்றி பின்வருமாறு கூறுகிறது.
"**(1)** நேர்மையின்றி யாரேனும்

a. உரிமதாரரின் மின் பணியமைப்புகளிலிருந்தோ, மின்னிணைப்புக் கம்பிகளிலிருந்தோ மேனிலை, புதை, நீரமிழ் மின் தொடர்கள் மற்றும் மின் வடங்களிலிருந்தோ மின்சாரத்தை எடுத்தலோ அல்லது அவற்றுடன் இணைப்பு ஏற்படுத்தும் செயல்களையோ, காரணங்களையோ, செய்தாலோ; அல்லது

b. மின்னளவியை நிலைகுலைத்தாலோ, நிலைகுலைந்த மின்னளவியை நிறுவினாலோ அல்லது பயன்படுத்தினாலோ, மின்னோட்டத் திசையை எதிராக்கும் மின்மாற்றிக் கண்ணி இணைப்பைப் பயன்படுத்தினாலோ, மின்னோட்டத்தை அளக்கும், அளவீடு செய்யும் அல்லது பதிவு செய்யும் முறையுடன் குறுக்கிடும் அல்லது மின்சாரத்தை வீணாக்கவோ திருடவோ வழி செய்யும் விளைவுகளை உருவாக்கும் முறையையோ கருவியையோ பயன்படுத்தினாலோ; அல்லது

c. சரியாக அல்லது துல்லியமாக மின்சாரம் அமைப்பதில் குறிக்கிட்டு அதன் மூலம் மின்சாரத்தைப் பயன்படுத்தவோ, நுகரவோ, எடுக்கவோ உதவும்படி, மின்னளவி கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் கம்பிகளுக்கும் சேதம் விளைவித்தாலோ அல்லது அவற்றை அழித்தாலோ, அவற்றில் ஏதாவது சேதமுறவோ அழியவோ செய்யும் பணிகளுக்குக் காரணமாக இருந்தாலோ அல்லது அதற்கு இசைந்திருந்தாலோ, மூன்றாண்டுகள் வரை சிறைத்தண்டனை தர அல்லது தண்டத்தொகை கட்ட அல்லது இரண்டுக்குமோ ஆட்பட உரியவராவார்.

எனினும், சுமை எடுத்ததோ, நுகர்ந்ததோ, பயன்படுத்தியதோ அல்லது சுமை எடுக்க முனைந்ததோ நுகர முனைந்ததோ அல்லது பயன்படுத்த முனைந்ததைப் பொறுத்தவரை –

(i) **10** கி.வா அளவுக்கும் அதிகமாக இல்லாத போது, முதல் தடவை தண்டனையாக விதிக்கப்படும், அவ்வகைத் திருட்டால் அவர் பெறும் நிதி ஈட்டத்துக்கு மூன்று மடங்களவுக்குக் குறையாமலும், இரண்டாம் மற்றும் அதற்கடுத்த பிற தடவை தண்டனையாக விதிக்கப்படும் தண்டத்தொகை, அவ்வகைத் திருட்டால் அவர் பெறும் நிதி ஈட்டத்துக்கு ஆறு மடங்களவுக்குக் குறையாமலும் விதிக்க வழி வகுக்கிறது.

(ii) 10 கி.வா அளவுக்கும் அதிகமாக இருந்தால் முதல் தடவை தண்டனையாக விதிக்கப்படும் தண்டத்தொகை, அவ்வகைத் திருட்டால் அவர் பெறும் நிதி ஈட்டத்துக்கு மூன்று மடங்களவுக்குக் குறையாமலும், இரண்டாம் மற்றும் அதற்கடுத்த பிற தடவை தண்டனையாக ஆறுமாதத்துக்கும் குறையாது தேவைப்பட்டால் **5** ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனையுடன் அவ்வகைத் திருட்டால் அவரடைந்த நிதி ஈட்டத்துக்கு ஆறுமடங்களவுக்குக் குறையாத தண்டத் தொகையும் விதிக்க வழி வகுக்கிறது.
மேலும், வாரியத்தாலோ, உரிமதாரராலோ அதிகாரத்துக்குப் புறம்பான முறையிலமைந்த செயற்கை வழிவகைகள் ஏதாவது, நுகர்வோர் அமைப்பில் சுமை எடுக்கவோ, நுகரவோ பயன்படுத்தவோ பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கண்டெடுக்கப்பட்டால், எதிர் நிலையான சான்றுகள் நிறுவப்படாத

வரையில், நுகர்வோர் நேர்மையின்றி மின்சாரத்தை எடுத்ததாகவும் நுகர்ந்ததாகவும் பயன்படுத்தியதாகவும் கருத, சட்டம் வழி வகுக்கிறது.

(2). இது தொடர்பாக அரசால் அமர்த்தப்பட்ட எந்தவொரு அலுவலரும்–

a. அதிகாரத்துக்குப்புறம்பான முறையில் மின்சாரம் பயன்பட்டிருப்பதாக நம்பும் காரணமுடைய உறைவிடம் அல்லது இருப்பிடத்தில் நுழையவும் கள ஆய்வு செய்யவும் உடைத்துத் திறந்து தேடிப் பார்க்கவும்.

b. அதிகாரத்துக்குப் புறம்பான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்திய பயன்படுத்திக்கொண்டுள்ள பொருளையோ, உதவும் பொருளையோ, கம்பிகளையோ, கருவிகளையோ, ஏற்பாடுகளையோ தேடவும் கைப்பற்றவும் அகற்றவும்.

c. துணைப்பிரிவு (1) இன்படியான குற்றந் தொடர்பான வழக்கைக் தொடர, அல்லது தக்க நடவடிக்கை எடுக்க பயன்படுத்துவதற்கு உரியதெனவும் சார்புடையதெனவும் அவரால் கருதப்படும் ஆவணங்களையும் கணக்குகளையும் பார்வையிடவும் கைப்பற்றவும், மேலும் அப்படி கைப்பற்றி எடுக்கும் ஆவணங்களின் மற்றும் கணக்குகளின் உலர் மின் நகல் (xerox) எடுக்க இசைவு தரவும் அல்லது அவரது முன்னிலையில் உரிய பகுதிகளுக்கான குறிப்பெடுக்கவும் சட்டம் வழி வகுக்கிறது.

(3) தேடும்போது, தேடப்படும் இடத்தின் பொறுப்பில் உள்ளவர் அவரது சார்பில் ஒருவர் உடனிருக்க வேண்டுவதோடு அப்படித் தேடும்போது கைப்பற்றிய அனைத்துப் பொருள்களின் பட்டியலைத் தயாரித்து அப்பட்டியலில் பொறுப்பு வகிப்பவர் அல்லது சார்பில் இருப்பவர் கையொப்பமும் இடுதல் வேண்டும்.

அத்தகைய உறைவிடத்தில் ஆண் உறுப்பினர் ஒருவர் முன்னிலையில்லாமல் சூரிய மறைவுக்கும் எழுச்சிக்கும் இடையிலான நேரத்தில், அது, வீட்டு இருப்பிடமாகவோ, வீட்டு வளாகமாகவோ இருந்தால் ஆய்வு செய்ய, தேட கைப்பற்றக்கூடாதென விதி வழி வகுக்கிறது.

(4) சட்டத்தின்படியான தேடல்கள், முடிந்த வரையில் குற்ற நடைமுறைவிதிமுறை, 1973 (1974ல் 2)விதி வகுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேடல், கைப்பற்றல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்."

<u>விளக்கம்</u>

மேற்பிரிவில் உள்ள மின்னளவி நிலைகுலைப்பும் மின்சாரத் திருட்டும் பொருத்தவரையில், ஓர் இசைவுப் பத்திரம் மூலம் நுகர்வோரிடமிருந்து இருப்பிடத்தை ஒருவர் வாடகைக்கு எடுத்திருந்தால் அதிகாரம் பெற்ற வாடகைதாரரே அனைத்து நடவடிக்கைகளுக்குமான பொறுப்பை ஏற்க வேண்டும்.

B) மின் தொடர்கள் மற்றும் பொருள்களின் திருட்டு

(1) சட்டத்தின் 136 ஆவது சட்டப்பிரிவு, மின் தொடர்கள் மற்றும் பொருள்களின் திருட்டு பற்றி கீழ்வருமாறு கூறுகிறது.

"1) நேர்மையின்றி யாரேனும்

(a) நிகழ்விற்கேற்ப உரிமதாரரின் அல்லது அதன் சொந்தக்காரரின் சம்மதமில்லாமல், இலாபம் அல்லது பலன் கருதியோ அப்படி அல்லாமலோ அச்செயல் செய்யப்பட்டாலும் உரிமையோடு அல்லது சட்டப்படி தேக்கியுள்ள, வைத்துள்ள, இருப்பில் உள்ள, குறிப்பிட்ட இடத்து வைத்துள்ள, இடத்திலுள்ள, ஒரு பணியிடத்திலிருந்தோ அல்லது வேறுவகை இடத்திலிருந்தோ நிலவும் இடத்திலிருந்தோ அல்லது வேறு பிற நிறுவிய அமைப்பிலிருந்தோ, கம்பத்திலிருந்தோ, கோபுரத்திலிருந்தோ, மின்னளவியையோ, பொருளையோ, மின் தொடர்களையோ வெட்டினாலும், அகற்றினாலும், எடுத்துக் கொண்டு சென்றாலும் இடமாற்றினாலும்; அல்லது

(b) சொந்தக்காரரின் சம்மதமில்லாமல் இலாபமோ அல்லது பலன் கருதியோ அல்லாமலோ கூட ஏதாவது மின்னளவியையோ பொருளையோ தேக்கி வைத்திருந்தாலும், உடமையாக வைத்திருந்தாலும் அல்லது அவரது வளாகத்தில் வைத்திருந்தாலும்; அல்லது

(c) சொந்தக்காரரின் சம்மதம் இல்லாமல், இலாபமோ பலன் கருதியோ அல்லாமலோ கூட அச்செயல் செய்யப்பட்டாலும், ஏதாவது மின்னளவியையோ பொருளையோ மின் தொடர்களையோ ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு கொண்டு செல்ல ஏற்றினாலோ சுமந்து சென்றாலோ இடம் பெயர்ந்தாலும்;

அவர் மின் தொடர்களையும் பொருள்களையும் திருடிய குற்றம் செய்தவராகச் சாற்றப்படுவதோடு மூன்றாண்டுகள் வரையிலான காலத்துக்குச் சிறைதண்டனை பெறவோ, தண்டத்தொகை கட்டவோ, இரண்டுக்குமோ உரியவராவார்.

2) துணைப்பிரிவு (1) இன் படி, ஏற்கனவே, தண்டனை பெறுவதற்குரிய குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டிருந்து அவர் மறுபடியும் அதே பிரிவின்படி மீண்டும் தண்டனை பெறுவதற்குரிய குற்றத்தை இரண்டாவது தடவையாகவோ அல்லது அதற்கடுத்துமோ செய்தால் அவர் ஆறுமாதங்களுக்குக் குறையாத ஆனால் 5 ஆண்டுகள் வரை கூட நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படுவதோடு ரூ.1000/– அளவுக்கும் குறையாமல் தண்டத்தொகை கட்டவும் விதிக்கப்படும்."

(C) திருட்டுப் பொருளைப் பெற்றதற்கான தண்டனை

(i) சட்டத்தின் 137 ஆவது சட்டப்பிரிவு , திருட்டுப் பொருளைப் பெற்றதற்கான தண்டனையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

"நேர்மையின்றி யாரேனும் திருடப்பட்ட மின் தொடரையோ பொருளையோ
பெற்றாலோ, திருடிய பொருளென அறியப்பட்டதையோ அல்லது அதற்கான
காரணங்கள் உள்ளவற்றையோ பெற்றாலோ, மூன்றாண்டுகள் வரை
நீடிக்கக்கூடிய விவரிக்கப்பட்ட கால அளவுக்குத் தண்டனைபெறவோ
உரிய தண்டத்தொகை கட்டவோ அல்லது இரண்டுக்குமோ உரியவராவர்"

(D) உரிமதாரரின் பணியமைப்புகளிலோ மின்னளவிகளிலோ குறுக்கீடு செய்தல்

(1) சட்டத்தின் சட்டப்பிரிவு 138, உரிமதாரரின் பணியமைப்புகளிலோ மின்னளவிகளிலோ குறுக்கீடு செய்தல் பற்றி பின்வருமாறு கூறுகிறது.

"i) யாரேனும்

(a) உரிமதாரர் மின்சாரம் வழங்கும் ஏதாவதொரு மின்தொடரில் ஏதாவதொரு கருவியையோ காட்டியையோ அல்லது மின்னளவியையோ அதிகார மீறலாக இணைத்தாலோ அம்மின் தொடரில் அமைந்த இதுபோன்ற வொன்றைத் துண்டித்தாலோ; அல்லது

(b) உரிமதாரரின் சொத்தான, வெட்டப்பட்டோ துண்டிக்கப்பட்டோ இருந்த மின் தொடரில் அல்லது பணியமைப்புகளில் அதிகார மீறலாக ஏதாவது கருவியையோ காட்டியையோ அல்லது மின்னளவியையோ மீள இணைத்தாலோ; அல்லது

(c) உரிமதாரருக்குச் சொந்தமான ஏதாவதொரு பணியமைப்புடன் தொடர்பு கொள்ளும் நோக்கத்துக்காக ஏதாவது பணியமைப்புகளை அமைத்தாலோ அமைக்க காரணமானாலோ அல்லது இணைத்தாலோ; அல்லது

(d) உரிமதாரருக்குச் சொந்தமான ஏதாவதொரு மின்னளவியையோ காட்டியையோ சாதனத்தையோ தவறான எண்ணத்தோடு தீங்கு ஏற்படுத்தினாலோ அல்லது அதுபோன்ற ஏதாவதொரு மின்னளவியின், காட்டியின் அல்லது சாதனத்தின் சுட்டெண்ணை (index) வேண்டுமென்றேயோ தவறான நோக்கத்துடனோ மாற்றினாலோ, அல்லது அதுபோன்று ஏதாவதொரு மின்னளவியின் காட்டியின் அல்லது சாதனத்தின் பதிவு செய்தலைத் தவிர்த்தாலோ மூன்றாண்டுகள் வரையில் கூட நீடிக்கக் கூடிய காலத்துக்குச் சிறைத்தண்டனை விதிப்பதற்கோ அல்லது 10,000/– ரூபாய் வரை தண்டத் தொகை கட்டும்படி விதிப்பதற்கோ அல்லது இரண்டுமே விதிப்பதற்கோ உரியவராவார். மேலும் அந்தக் குற்றம் தொடர்ந்தால் நாளொன்றுக்கு 500/– ரூபாய் வரையுள்ள வீதத்தில் தொடர்ந்து தண்டத் தொகை கட்டிவருமாறும் விதிக்கப்படுவார். மேலும் பத்தி (a) விதியில் குறிப்பிட்டபடி இணைப்பு செய்வதற்கான தடயம் ஏதும் இருந்ததாகவோ அல்லது பத்தி (b) விதியில் குறிப்பிட்டபடி மீளிணைப்பு செய்யப்பட்டிருந்ததாகவோ அல்லது பத்தி (c) விதியில் குறிப்பிட்டபடி தொடர்புபடுத்தும் வழிவகைகள் இருந்ததாகவோ அல்லது பத்தி(d) விதியில் குறிப்பிட்டபடி மாற்றமோ தவிர்ப்போ நேர்ந்திருந்ததாகவோ, நிகழ்விற்கேற்ப அத்தகைய இணைப்பு, மீளிணைப்பு, தொடர்புபடுத்துதல், மாற்றம், தவிர்ப்பு அல்லது நேர்மையற்ற பயன்பாடு ஏதேனும் கண்டறியப்பட்டால் அது அறிந்தே, வேண்டுமென்றே, நுகர்வோரால் செய்யப்பட்டதாகவே கருதப்படவேண்டும்."

(E) பணியமைப்புகளைப் பொறுப்பற்ற முறையில் உடைத்தலும், சேதப்படுத்தலும்

(i) சட்டத்தின் 130 வது சட்டப்பிரிவு பொறுப்பற்ற முறைப் பயன்பாடு பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

"யாரேனும் மின்வழங்கல் தொடர்பான எந்தப் பொருளையாவது பொறுப்பற்ற முறையில் உடைத்தாலோ, தீங்கு ஏற்படுத்தினாலோ, கீழே வீசி எறிந்தாலோ, சேதப்படுத்தினாலோ அவர் பத்தாயிரம் ரூபாய் வரையிலான தண்டத் தொகை கட்டும் தண்டனை பெறுதற்குரியவராவார்"

(F) பணியமைப்புகளை வேண்டுமென்றே சிதைத்தல் அல்லது தீங்கிழைத்தல்

(1) சட்டத்தின் 140 ஆவது சட்டப்பிரிவு, தவறான நோக்கத்தோடு மின்சாரத்தை வீணாக்குதல், பணியமைப்புகளுக்குச் சிதைவு அல்லது தீங்கு விளைவிப்பதற்கான தண்டத்தொகை குறித்துப் பின்வருமாறு கூறுகிறது.
"யாரேனும் மின்வழங்கலைத் துண்டிக்கும் உள்நோக்கத்துடன், மின்வழங்கும் தொடரையோ, பணியமைப்பையோ, வெட்டினாலோ, சிதைத்தாலோ, வெட்டவும் சிதைக்கவும் முனைந்தாலோ, அவர் பத்தாயிரம் ரூபாய் வரையில் தண்டத்தொகை சுட்டும்படி தண்டனை விதிக்கப்படுவார்"

(G) பொது மின்விளக்குகளை அணைத்தல்

(1) சட்டத்தின் 141 ஆவது சட்டப்பிரிவு, பொதுமின்விளக்குகளை அணைப்பதற்குரிய தண்டத்தொகை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.
"யாரேனும் தீய நோக்கத்தோடு பொதுமின் விளக்குகளை அணைத்தால், அவர் இரண்டாயிரம் ரூபாய் வரையில் தண்டத்தொகை கட்டும்படி விதிக்கப்படுவார்"

24. குற்றங்களுக்கான விடுப்புத்தொகை

(1) சட்டத்தின் 152 ஆவது பிரிவு, குற்றங்களுக்கான விடுவிப்புத் தொகை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

"1) குற்ற நடவடிக்கை விதிமுறைச்சட்டம் 1973 (1974 ல் 2) இல் உள்ளடங்கிய எதையும் கருதாமல், சட்டத்தின்படி மின்சாரத் திருட்டுக் குற்றம் புரிந்த அல்லது அப்படி புரிந்ததாகத் தக்க காரணங்களால் ஐயப்பட்ட நுகர்வோர் அல்லது தனியொருத்தர், அந்தக் குற்றத்துக்கான விடுவிப்புத் தொகையைப் பின்வரும் அட்டவணையின்படி கட்டினால், அதை உரிய அரசோ, இப்பணிக்காக அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரோ அத்தொகையை ஏற்கலாம்"

| மின்னிணைப்பு வகையினம் | உயர் அழுத்த மின்வழங்கலின் ஒப்பந்த மின்தேவையில் ஒரு கிலோ வோல்ட்டாம்பியருக்கு (Volt ampere) தாழ் அழுத்த மின்வழங்கலின் இணைந்துள்ள சுமையில் ஒரு கிலோ வாட்டுக்கு, ஒரு பரிதிறனுக்கு (பதி) அல்லது அதன் பகுதிக்குக் கட்டவேண்டிய விடுவிப்புத் தொகை வீதம் |
|---|---|
| 1. தொழிலகம் | இருபதாயிரம் ரூபாய் |
| 2. வணிகம் | பத்தாயிரம் ரூபாய் |
| 3. வேளாண்மை | இரண்டாயிரம் ரூபாய் |
| 4. பிறவகை | நான்காயிரம் ரூபாய் |

உரிய அரசு தனது அரசிதழ் மூலம் திருத்தம் கொண்டு வரும்வரை மேல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகை வீதம் செல்லுபடியாகும்.

2) துணைப்பிரிவு (1) இன்படி, பணத்தொகையைக் கட்டியதும் அக்குற்றத்துக்காக பிடித்து வைக்கப்பட்ட எந்த தனியொருவரையும் விடுதலை செய்துவிட வேண்டும். எந்தக் குற்றவியல் நீதிமன்றத்திலும் அத்தகைய நுகர்வோர் அல்லது தனியொருத்தரின் பேரில் எவ்வழக்கும் தொடரக் கூடாது.

3) துணைப் பிரிவு (1) இன்படி, குற்றம் செய்ததற்கான விடுவிப்புத் தொகையைத் தக்க அரசோ, அரசால் இப்பணி தொடர்பாக அதிகாரம் பெற்றவரோ ஏற்பது குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் 1973 (1974ல் 2) இல் உள்ள 300 ஆவது சட்டப்பிரிவுப்படி, அவரது குற்றத்தைத் தள்ளுபடி செய்து விடுவித்ததற்குச் சமமாகக் கருதப்படும்.

4) துணைப்பிரிவு (1)இன் படி, எந்தத் தனியொருவரோ, நுகர்வோரோ விடுவிப்புத் தொகை கட்டினால் ஏற்க ஒரே ஒருமுறை மட்டுமே அனுமதிக்கப்படும்."

25. உரிமதாரரின் பொருத்தமைப்புகளை அல்லது பிற கருவிகளை அகற்ற (நுகர்வோரின்) உறைவிடத்துக்குள் உரிமதாரர் நுழைவதற்கான அதிகாரம்

(1) சட்டத்தின் 163 ஆவது சட்டப்பிரிவு, (நுகர்வோரின்) இருப்பிடத்துக்குள் நுழைவதற்கான உரிமதாரரின் அதிகாரம், பற்றிப் பின்வருமாறு கூறுகிறது
"1) தான் கருதிய உறைவோருக்குத் தெரிவித்த பிறகு போதுமான கால இடைவெளிக்குப்பின் உரிமதாரர் அல்லது உரிமதாரரால் அதிகாரம் பெற்ற வேறொருவர் பின்வரும் நோக்கத்துக்காக

அவரால் சட்டப்படி மின் வழங்கல் தொடர்களையோ பணியமைப்புகளையோ நிறுவி மின்சாரம் தரப்படும், தரப்பட்டுள்ள இருப்பிடத்துக்கு உள்ளோ அல்லது அத்தகைய அமைப்புகளுக்குக் கீழோ, மேலோ, நெடுகவோ, குறுக்கிலோ, உள்ளோ, புறத்தோ அமைந்துள்ள இருப்பிடத்துக்குள்ளோ, மனைக்குள்ளோ அங்கு உறைபவரிடம் வரும் நோக்கத்தின் தகவல் தெரிவித்து நுழையலாம்.

(a) ஆய்வு செய்யவும் சோதிக்கவும் பழுது பார்க்கவும் உரிமதாரருக்குச் சொந்தமான மின்சாரம் தரும் சாதனங்களையோ பணியமைப்புகளையோ பொருத்தமைப்புகளையோ மாற்றி அமைக்கவும், அல்லது

(b) வழங்கப்பட்ட மின்சார அளவை அல்லது தரப்பட்ட மின்வழங்கலின் மின்சார அளவை உறுதி

செய்யவும்; அல்லது

(c) மின்வழங்கல் இனி தேவையற்ற நிலையிலோ அல்லது உரிமதாரர் மின்வழங்கலைத் துண்டிக்கவோ, அகற்றவோ அதிகாரம் பெற்ற நிலையிலோ, உரிமதாரருக்குச் சொந்தமான எந்தவொரு மின்வழங்கல் தொடரையும், மின்னளவிகளையும், பொருத்தமைப்புகளையும், பணியமைப்புகளையும், சாதனங்களையும் அகற்றவும்.

2) *உறைபவருக்*கு 24 மணி நேரத்திற்கு குறையாமல் எழுத்து வடிவிலான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்துவிட்டு, மேற்சொன்னபடி உரிமதாரரோ அல்லது உரிமதாரரால் அதிகாரம் பெற்ற தனியொருத்தரோ செயல்பாட்டு நீதிபதியிடமிருந்து பெற்ற சிறப் பு ஆணையை நிறைவேற்ற,

(a) துணைப்பிரிவு (i) ன்படி குறிப்பிட்டுள்ள நோக்கத்துக்காக, அதில் குறிப்பிட்டுள்ள இடத்திலோ அல்லது மனையிலோ நுழையலாம்.

(b) அவரால் மின்சாரம் வழங்கப்படும் எந்தவொரு இருப்பிடத்துக்குள்ளும், நுகர்வோர் மின்சாரம் பெறப் பயன்படும் மின்கம்பிகளையோ, பொருத்தமைப்புகளையோ பார்வையிடவும், சோதிக்கவும், அவை நுகர்வோருக்குச் சொந்தமானவையாக இருந்தாலும் நுழையலாம்.

3) மேற்சொன்னபடி உரிமதாரரோ அல்லது உரிதாரரால் அதிகாரம் பெற்ற வேறொருவரோ துணைப்பிரிவுகள் 1, 2 இல் சொன்ன செயல்களை நிறைவேற்றுவதற்காக நுழைய, நுகர்வோர் மறுப்பு தெரிவித்தாலோ அல்லது அந்த உரிமதாரரோ அல்லது வேறொருவரோ அவரது இருப்பிடத்துக்குள் அல்லது மனைக்குள் நுழைந்த பிறகு மேற்குறிப்பிட்ட துணைப்பிரிவுகளில் அதிகாரம் வழங்கப்பட்ட செயல்களை நிறைவேற்ற இசையாவிட்டாலோ அல்லது அப்படி நுழைந்து செயல்படும் போது தக்க வசதிகளைத் தர மறுத்தாலோ, உரிமதாரர் நுகர்வோருக்கு எழுத்துமூலமாய் கொடுத்த 24 மணிநேர அறிவிப்பின் காலக்கெடு முடிந்ததும் நுகர்வோருக்கு வழங்கியுள்ள மின்வழங்கலை, அவர் மறுப்பு தெரிவிக்கும் வரை, துண்டித்து வைக்கலாம். ஆனால் அதற்கப்பால் துண்டிப்பு நீடிக்கக் கூடாது."

26. இந்த விதித்தொகுப்பினை பகிர்மான விதித்தொகுப்போடும் மின்சாரச் சட்டம், 2003 மற்றும் அதன் திருத்தங்களோடும் படிக்க வேண்டும்.

(1) இந்த விதித்தொகுப்பின் உரிமதாரருக்கும் நுகர்வோருக்கும் இடையில் உள்ள நடைமுறைச் செயல்பாட்டு உறவுகளைப் பற்றி கூறுகிறது. இந்த விதியைப் பகிர்மான விதித்தொகுப்போடும் மாநில மின்கட்டமைப்பு விதித்தொகுப்போடும் சட்டத்தின் பொருத்தமான விதிவகுப்புகளோடும் மற்றும் அவற்றின் திருத்தங்களோடும் அவற்றின் மின்சார வழங்கல், நுகர்தல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளோடும் இணைந்து படிக்க வேண்டும்.

(2) இந்த விதித்தொகுப்பின் விதி வகுப்புகளில் சில சட்டத்துக்கும் அதில் வகுக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்குமுறைவிதிகள் ஆகியவற்றுக்கும் இசைவின்றி அமைந்தாலும், அத்தகைய இசைவுறாமையைக் கருதாமல், இவ்விதித்தொகுப்பின், அவை தவிர்த்த, பிற விதிவகுப்புகள் நடைமுறையில் செயல்பட உரியனவாகும்.

(3) இந்த விதித்தொகுப்பின் ஏதாவதொரு விதிவகுப்பு பற்றிய பயன்பாட்டிலோ விளக்கத்திலோ தகராறு ஏற்பட்டால் அதை ஆணையத்தின் பார்வைக்கு அனுப்பிவைக்க வேண்டும். இது தொடர்பாக ஆணையத்தின் முடிவே இறுதியானதாக அமைவதோடு, அம்முடிவு அனைத்துத் தரப்பினர்பாலும் கட்டுப்பாடு செலுத்த வல்லதுமாகும்.

(4) எங்கெல்லாம் இந்த விதித்தொகுப்பில் மின்சாரச் சட்டம், 2003 இன் பகுதிகள் மீளத் தரப்பட்டுள்ளனவோ, அங்கெல்லாம் சட்டத்தில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களும், திருத்தங்களும் தாமாகவே இவ்விதித்தொகுப்பின் கீழ் நடைமுறைக்கு வரும் தன்மையனவாகும்.

## அத்தியாயம் 5 – விதித்தொகுப்புக்கான மீள்பார்வைக் குழு (Code Review Panel)

27. விதித்தொகுப்புக்கான மீள்பார்வைக் குழுவை அமர்த்தல்

(1) ஆணையம் பின்வருவோரை உள்ளடக்கிய மீள்பார்வைக்குழுவை (இனி இந்த அத்தியாயத்தில் 'குழு' என மட்டுமே சுட்டப்படும்) அமர்த்தலாம்.

a) மா.மி.செ.ப அமைப்பிலிருந்து தலைமைப் பொறியாளருக்கும் குறையாத பதவியில் அல்லது அவருக்கு நிகரான பதவியில் உள்ள ஓர் உறுப்பினர் தலைவர்.
b) மா.மி.செ.ப அமைப்பிலிருந்து தலைமைப் பொறியாளருக்கும் குறையாத பதவியில் அல்லது அவருக்கு நிகரான பதவியில் உள்ள ஓர் உறுப்பினர் செயலாளர்.
c) து.மி.ப.மை அமைப்பிலிருந்து ஓர் உறுப்பினர்
d) பகிர்மான உரிம அமைப்புகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு சார்பாளர்
e) ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தால் அவற்றின் சார்பாக ஓர் உறுப்பினர்,
f) வீட்டு நுகர்வுப் பிரிவிலிருந்து ஒரு சார்பாளர், தா.அ தொழிலகப் பிரிவு சார்பில் ஒரு சார்பாளர் மற்றும் வேளாண் நுகர்வுப் பிரிவு சார்பில் ஒரு சார்பாளர்.
g) உ.அ., அ.உ.அ நுகர்வோர்களுக்குப் பேராண்மை வகிக்கும் ஓர் உறுப்பினர்
h) தொழிலக ஆற்றல் மரபு சாரா ஆற்றல் வாயில் பிரிவுக்குப் பேராண்மை வகிக்கும் ஓர் உறுப்பினர்.

(2) விதித்தொகுப்பின் நடைமுறையில் தேவைப்படும் மாற்றங்களும் திருத்தங்களும் கருதிப் பார்க்க, குழு அவ்வப்போதும், முடிந்தவரை மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது அல்லது ஆணையம் அப்படித் தேவையெனக் கருதும்போது கூடி விவாதிக்கலாம்.

(3) குழுவின் செயல்பாடுகளாவன

(a) இந்த விதித்தொகுப்பும், மாநில மின்கூட்டமைப்பு விதித்தொகுப்பும், பகிர்மான விதித்தொகுப்பும் செயல்படும் முறையினை மீள் பார்வையிடல்

(b) உரிமதாரரிடமிருந்தோ நுகர்வோரிடமிருந்தோ அல்லது ஆர்வலரிடமிருந்தோ வரும் ஆலோசனைகளைச் சீர்தூக்கிப் பார்த்தல்

(c) ஆணையம் குழுவிடம் ஒப்படைக்கும் குறிப்பிட்ட பொருள்பற்றிச் சீர்தூக்கி பார்த்தலும் உரிய கருத்துக்கள் அளித்தலும்.

(4) விதித்தொகுப்பை மீள்பார்வையிடுவதற்கான வழிமுறை

(i) இந்த விதித்தொகுப்பில் மாற்றங்கள் செய்யக் கருதும் உரிமதாரரோ நுகர்வோரோ வேறு ஆர்வலரோ தாங்கள் குறிப்பிடும் மாற்றங்களுக்கான சூழலையும் காரணங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டு எழுத்து மூலமான முன் வரைவை குழுவுக்கு அனுப்ப வேண்டும். நுகர்வோர்களுக்கோ நுகர்வோர் குழுக்களுக்கோ வேண்டிய தேவைகளுக்கேற்ப இந்த விதித்தொகுப்பில் மாற்றங்கள் செய்ய வேண்டியது இன்றியமையாததெனக் கருதினால் உரிமதாரர் இந் நோக்கத்துக்காக, அத்தகைய நுகர்வோர்கள் மற்றும் நுகர்வோர் குழுக்களின் சார்பாளர்களை குழுமச் செய்து கூட்டங்கள் நடத்தலாம்.

(ii) குழு, இதுபோன்ற முன்வரைவுகளைப் பெற்றாலோ அல்லது ஆணையம் அத்தகைய பார்வைகளை அனுப்பி வைத்தாலோ, அதைக் கருதிப் பார்த்து, அது தொடர்பாக மா.மி.செ.ப கருத்தை எழுத்து வடிவில் பெற அதற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(iii) குழு, மா.மி.செ.ப கருத்துரைகளைக் கருதிப் பார்க்க, உறுப்பினர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் குழு தேவையெனக் கருதினால் அது தனது திசைகாட்டலின்படி, மாற்றங்களுக்கான முன்வரைவுகளை அனுப்பியவர்களையும் பிற ஆர்வலர்களையும் உள்ளாட்சி

அதிகாரிகளையும் தொலைத் தொடர்புக் குழுமங்களையும் வரவழைத்து அவர்களது கருத்துக்களை வாய்மொழி மூலமாகப் பெறலாம்.

(iv) குழு, முன்வரைவுகளையும் அதின் பேரிலான மாசெப கருத்துரைகளயும் கருதிப் பார்த்து சார்புடைய வழக்குகளை ஆராய துணைக் குழுக்களை அமைக்கலாம்.

(v) குழு, விதித்தொகுப்பின் மாற்றங்கள் தொடர்பாக தனது கருத்துக்களை முடிவு செய்ததும் அவற்றை ஆணையத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இங்கே விதிக்கப்பட்ட விதிமுறைகளுடன், மிகைநிரப்பாக, குழு தானே தனது கூட்டங்களை நடத்துவதற்கான வழி முறையை உருவாக்கிக் கொள்ள குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

(5) ஆணையம் பொருத்தமெனக் கருதும் தக்க மாற்றங்களுடனோ, அது இன்றியோ, குழு பரிந்துரைத்த மாற்றங்களுக்கு ஒப்புதல் தந்து, தேவைப்படும் வகையில் அதை வெளியிடலாம்.

## படிவம் 1

(பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5 (7) )

பெறுநர்

குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்

..................................................................

.................................................................. (முழு முகவரியும் தொலைபேசி எண்ணும்) என்ற முகவரியில் திரு / திருமதி .................................................. அவர்களின் மகனாகிய, மகளாகிய, மனைவியாகிய திரு / திருமதி ............................................... எனப்பெயருள்ள நான் வாழ்ந்து வருகிறேன்.

................................ வட்டத்தில் ................................ என்ற ஊரில் / நகரில் ........................... என்ற தெருவில்.............................. என்ற கதவிலக்கமும் ............................ கட்டண வீதத்தில் ..................... என்ற பகிர்மானத்தின் ............................. என்ற மின்னிணைப்பு எண்ணில் மின்சாரம் தரப்பட்டுள்ளதுமான, முன்பு திரு/ திருமதி ....................................... அவர்களின் மகனாகிய / மகளாகிய / மனைவியாகிய திரு / திருமதி ............................ என்பவரில் இருந்த இருப்பிடம், இப்போது எனது உடைமையாகி உள்ளது.

1) மேற்குறிப்பிட்ட கட்டிடம் எனது உடைமையானதற்கான விற்பனைப் பத்திரத்தின் உலர்மின் நகல் (xerox copy).

அல்லது

பெருநகர நீர், வடிகால் இணைப்பு எனது பெயரில் உள்ளது. அதற்கான அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட ஆதாரத்தின் உலர்மின் நகல்.

அல்லது

உரிய வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றிதழ்

2) விண்ணப்பப்படிவம் மற்றும் இசைவுப் பத்திரப் படிவம்.

3) ரூ.80/– மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத் தாளில் உள்ள காப்புறுதிப் பத்திரம்.

ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ...................... என்ற கணக்கு எண்ணில் பின்னாளில் ஏதாவது கட்ட வேண்டிய பாக்கி இருந்தால் அதையும் கட்டவும் நான் இதன் மூலம் உறுதி ஏற்கிறேன்.

எனவே .......................... என்ற எண்ணுள்ள மின்னிணைப்பை எனது பெயரில் மாற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

பெயர் மாற்றம் பெறுபவர்

இடம்: கையொப்பம்

தேதி : முழு முகவரி

## படிவம் – 2

<u>பெயர் மாற்றப் படிவங்கள் (பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 5 (7) )</u>

(விற்பனை போன்ற நிலைமையின் போது பெயர் மாற்றம் தருபவர் அளிக்க வேண்டிய சம்மதக் கடிதமாகப் பயன்படுத்த வேண்டியது)

பெறுநர்

குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்
உரிமதாரர் முகவரி

திரு/ திருமதி ................................ அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி ....................................... என்ற .........................ஊரில் .....................................என்ற தெருவில் .......................... என்ற கதவிலக்கத்தில் உள்ள கட்டிடத்தின் சொந்தக்காரராகிய நான் மேற்படி கட்டிடத்தை அவருக்கு விற்று விட்டமையால் ........................... என்ற கணக்கு எண்ணுடைய என் பெயரில் உள்ள மின்னிணைப்பைத் திரு / திருமதி ......................... அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி ....................... என்பவர் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்ய, நான் இதன் மூலம் முழுச் சம்மதத்தையும் தருகிறேன்.

இந்தப் பெயர்மாற்றம், இருப்பில் இருக்கும் வைப்புத் தொகையை வைத்து பெயர் மாற்றம் பெறுபவர் காப்புவைப்புத் தொகையும் பிற கட்டணங்களையும் செலுத்த ஒப்புக் கொள்வதை வைத்து தரப்படலாம்.

பெயர் மாற்றம் தருபவர்

இடம்: கையொப்பம்

தேதி: முழு முகவரி

* இதில் தேவையற்ற வாக்கியத் தொடரை நீக்கிவிடலாம்.

## படிவம் 3 <u>(பார்க்க ஒழுங்குமுறை விதிகள் 5 (7) )</u>

<u>காப்புறுதிப் பத்திரம்</u>

பொருள்: மின்சாரம் .......................... பகிர்மானம் – காப்பு வைப்புத் தொகையையும் மின்னிணைப்பையும் மாற்றுதல் – உறைவிட, இருப்பிட எண் ..............

மின்னிணைப்பு கணக்கு எண் ........................ தொடர்பாக.

திரு / திருமதி ........................... அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய திரு / திருமதி .................................... என்ற பெயருள்ள நான் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால் .......................................... ஆம் தேதியிலிருந்து திரு / திருமதி .......................... என்பவரின் மேற்கண்ட உறைவிட உரிமையாளர் இறந்துவிட்டார். நான் காலஞ்சென்றவரின் சட்டப்படியான வாரிசு என்பதால் அந்த உறைவிடத்தில் அமைந்த காப்பு வைப்புத் தொகையையும் மின்னிணைப்பையும் எனது பெயரில் மாற்றித்தர விரும்புகிறேன். மேலும், காலஞ்சென்ற திரு / திருமதி ......................... அவர்களது சொத்தின் சட்டப்படியான வாரிசான எனது பெயரில் காப்பு வைப்புத் தொகையையும் மின்னிணைப்பையும் மாற்றுவதால் ஏற்படும் தகராறுகளால் உரிமதாரருக்கு விளையக்கூடிய எவ்வகைச் சேதங்களாலும் இழப்புகளாலும் வரும் முழு இழப்பீட்டையும் ஈடுகட்ட நான் காப்புறுதி தர இசைகிறேன்.

உரிமதாரர் எனக்கு உரிமையாகவுள்ள அசையும், அசையா சொத்துக்கள் பேரில் வழக்கு தொடுக்க உரிமையுடையவர் என்பது மட்டுமன்றி, என்பேரில் தனிப்பட்ட முறையிலும் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அம்மின்னிணைப்பு சார்ந்து எழும் அனைத்து இழப்புகளுக்கான கோரல்கள் வைப்பது தொடர்பாகவும் வழக்கு தொடுக்கவும் உரிமை பெற்றவராவர். மேற்சொன்ன தகவலனைத்தும் உண்மையெனச் சான்றளிக்கிறேன்.

நுகர்வோரின் கையொப்பம்.

என்முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது
பொதுச் செல்வாக்குள்ள வழக்கறிஞர் / அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்

இடம்:

தேதி:

## படிவம் – 4 (பார்க்க . ஒழுங்குமுறை விதிகள் 5 (7) )

உறுதியேற்பு

திரு / திருமதி ............................. அவர்களின் மகன் / மகள் / மனைவி ஆகிய ................................. என்ற பெயர்கள் உடைய நான் / நாங்கள், அதாவது இனி நுகர்வோர் என அழைக்கப்படுபவர் / படுபவர்களாகியவர்கள் திரு / திருமதி ........................... .(உரிமதாரர் பெயர்) அவர்களை, அதாவது, இனி உரிமதாரர் என அழைக்கப்படுபவரை, அணுகி ............ என்ற கணக்கு எண்ணில் உள்ள ............. என்ற இடத்தில் மின் வழங்கல் தரப்பட்ட மின்னிணைப்பை என் பெயரில் / எங்கள் பெயரில் மாற்றம் செய்து தருமாறு கேட்டதாலும் அதற்கு அவர் உரிய என்னால் / எம்மால் தரப்பட்ட ஆவணங்களைப் பார்வையிட்டு அம்மின்னிணைப்பின் கணக்கு எண்ணை, நுகர்வோர் வேண்டியபடி பெயர்மாற்றம் செய்து தர இசைந்ததாலும் பின்வருவனவற்றுக்கு இந்த உறுதியேற்பு சான்றளிக்கிறது.

1. நுகர்வோர், அவரின் / அவர்களின் பெயரில் மாற்றப்பட்ட மின்ணைப்பின் கணக்கு எண்ணில் பெயர் மாற்றத்தின் விளைவாகச் செலுத்த நேரும் கடப்பாடுகளை (அல்லது நிலுவைத் தொகைகளை) உரிமதாரர் கேட்டோ கேட்காமலோ கட்ட வேண்டும். நுகர்வோர் தனது பெயரில் கணக்கு எண் மாற்றப்பட்ட பிறகு பெயர் மாற்றத்துக்கு முந்தைய கால இடைவெளியில் விட்டுப் போய் பிறகு ஆய்வின் போது அந்த விடுபாடு கண்டுபிடிக்கப்பட்ட, அம்மின்னிணைப்பு தொடர்பான கேட்புத் தொகைகளைக் கட்டும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

2. நுகர்வோர் இந்த உறுதியேற்பின் கடைகளை நிறைவேற்றத் தவறினால், உரிமதாரர், அவரது / அவர்களது மின்னிணைப்பைத் துண்டிப்பு செய்ய உரிமை கொண்டவர் என்பதற்கும் இசைவு தருகிறார்.

3. மேலும், நுகர்வோர் கணக்கின் பெயர் மாற்றம் தொடர்பாக, நுகர்வோராகிய அவரோ, அவர்களோ வேறொருவரோ தகராறு / தகராறுகள் எழுப்புவதன் விளவாக உரிமதாரருக்கு ஏற்படும் இழப்பு, சேதம், வேறு பிற கட்டுப்பாட்டுத் தொகைக்கு ஈடுகட்ட உறுதியேற்பு தரவும் இசைகிறார்.

நுகர்வோரின் / நுகர்வோர்களின்
கையொப்பம் / கையொப்பங்கள்

<u>சாட்சிகள் முகவரியுடன்</u>

1.

2.

## படிவம் – 5 <u>(பார்க்க. ஒழுங்குமுறை விதிகள் 22 (8) )</u>

<u>நிலுவைத் தொகையைத் தவணகளில் கட்டுவதற்கான உறுதியேற்பு</u>

நுகர்வோர் நிலுவைத் தொகையைத் தவணைகளில் கட்ட ஒப்புதல் வேண்டும் போது

தரவேண்டிய உறுதியேற்பு.

விடுநர்
பெறுநர்

குறிப்பிட்ட பதவிப் பொறியாளர்
பகிர்மான உரிமதாரர்
பெயரும் முகவரியும்

**<u>உறுதியேற்பு</u>**

ஐயா,

.................................... தொடர்பான நிலுவைத் தொகையை நான் / நாங்கள் தவணைகளில் கட்டுவது தொடர்பாக ...................... என்பவருக்காக உறுதியேற்பு தருகிறேன் / தருகிறோம்

(i) ………………… (எழுத்தால் ரூபாய் ..............................) ஆகிய மொத்தத் தொகையைப் பின்வரும் மாதத் தவணைகளில் கட்டவும் அதோடு அப்படிக் குறிப்பிட்டதவணைகளைக் கட்டத் தவறினால் விதிக்கப்படும் தாமதச் செலுத்த உபரிக் கட்டணத்தையும் கட்டவும்.
முதல் தவணை ரூ ..........................., .................. ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு
இரண்டாம் தவணை ரூ .................... , .............. ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு
மூன்றாம் தவணை ரூ ...................., .................. ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு

(ii) மேலும், மேற்சொன்ன தவணை அட்டவணையைத் தவறாமல் சரியாகப் பின்பற்றவும் அதோடு மாத, இருமாத மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தை உரிய தேதியில் கட்டவும் அப்படிக் கட்டத் தவறிவிட்டால் அறிவிப்பேதும் இல்லாமலே மின்னிணைப்பைத் துண்டித்து (நிலுவைத் தவணை உட்பட்ட) அனைத்து நிலுவைகளை (தவணை கட்டத் தவறிய தொகைகளுக்கு) உரிய தாமதச் செலுத்த உபரிக் கட்டணத்தோடு, செலுத்திய பிறகே மின்னிணைப்பு செய்ய இசைவும்.

கையொப்பம்.

குழும முத்திரை
முன்னிலை சாட்சிகள்
(பெயரும் முகவரியும்)
1.
2.

## படிவம் – 6

(பார்க்க, ஒழுங்குமுறை விதிகள் 20)

சட்டத்தின் 127 (1) ஆவது பிரிவின் கீழ் மேல் முறையீட்டு அதிகாரியிடம் மேல் முறையீடு செய்ய குறிப்பிட்ட மேல்முறையீட்டுப் படிவம்

(1) மேல் முறையீட்டு எண் ............................... ஆண்டு ...................

(2) மேல் முறையீட்டாளர் பெயரும் முகவரியும்

(3) ஆணை வழங்கும் மதிப்பீட்டு அலுவலர் பெயரும் முகவரியும்

(4) மேல் முறையீடு செய்யும் ஆணை மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தேதி

(5) மேல் முறையீட்டாளருக்கு அறிவிப்புகள் அனுப்புவதற்கான முகவரி

(6) செலுத்தும்படி வழங்கப்பட்ட ஆணைத்தொகை

(7) சட்டப்பிரிவு 127 (2) இன்படி மதிப்பீட்டுத் தொகையில் 1.3 பகுதி வைப்புத் தொகை கட்டப்பட்டுவிட்டதா ? (வைப்புத் தொகை கட்டப்பட்டதற்கான சான்று கட்டாயமாகத் தர வேண்டும்)

(8) அடிப்படை உண்மைத் தகவல்கள் பற்றிய அறிக்கை (உண்மைத் தகவல்கள் சுருக்கமாகத் தரப்படல் வேண்டும்)

(9) மேல்முறையீட்டின் அடிப்படை பின்னணிகள் (இங்கு எந்தவித அடிப்படை பின்னணியில் மேல் முறையீடு செய்யப்படுகிறது என்பதைத் தொகுத்துத் தரவேண்டும்)

(10) மேல்முறையீட்டாளர் விசாரிக்க விரும்பும் வழிமுறை, தனது சொந்த வாய்மொழி மூலமாகவா, வழக்கறிஞர் மூலமாகவா அல்லது வேறு அதிகாரம் தரப்பட்ட சார்பாளர் மூலமாகவா ?

(மேல்முறையீட்டாளர் தனது கருத்து அறிவிப்பை வழக்கறிஞர் வழியாகவோ வேறு அதிகாரம் தரப்பட்ட சார்பாளர் மூலமாகவோ தரவிரும்பும் போது அதிகாரம் தரப்பட்ட சார்பாளருக்கு அவர் அதிகாரம் தரும் கடிதத்தைத் தரவேண்டும் அல்லது அவரது வழக்கைத் தொடுக்கும் வழக்கறிஞரை அமர்த்தும் வக்காலத்துப் படிவத்தைத் தரவேண்டும்.

(ii) வேண்டப்படும் மீட்புத் தொகை

மேல் முறையீட்டாளர் கையொப்பம்

தேவைப்பட்டால் குறிப்பிட்ட நிகழ்வில்
தொடர்புள்ள அதிகாரம் வழங்கப்பட்ட
சார்பாளரின் கையொப்பம்.

## படிவம் –7

<u>(பார்கக ஒழுங்குமுறை விதிகள் 20)</u>
<u>சட்டத்தின் 127(1) ஆவது பிரிவுப்படி மேல்முறையீட்டு அதிகாரியின்</u>
<u>முன்னிலையில் ஆன வாக்குறுதி</u>

மேல்முறையீட்டு எண் ...................................... ஆண்டு ..........................................
(மேல்முறையீட்டு அதிகாரியின் அலுவலகத்தால் நிரப்பப்பட வேண்டியது)

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர்<br>பெயரும் முகவரியும் | மேல்முறையீட்டாளர் |
| பதிப்பீட்டு அலுவலர்<br>பதவிப் பெயரும்<br>முகவரியும் | எதிர் மனுதாரர் |

தனது மேல்முறையீடு மேல் முறையீட்டாளரால் பதிவு செய்வதற்கு உறுதுணையாகத் தரப்படும் சரிபார்ப்புக்கான உறுதிமொழிப்பத்திரம் ( Affidavit)

திரு................. என்பவரின் மகனும் .......வயதும் உடைய உயர்திரு ........... என்ற பெயருடையவரும் .......................... என்ற இடத்தில் உறைபவருமாகிய நான் உண்மை வாய்ந்த அறநிலையோடு உறுதிப்படுத்திப் பின்வருவனவற்றை விளம்புகிறேன்.

1. நான் எனது மேல்முறையீட்டு வழக்கில் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அலுவலரின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்த எனது வழக்கின் மேல் முறையீட்டாளன் / மேல்முறையீட்டாளரின் அதிகாரம் பெற்ற சார்பாளர். எனவே மேல் முறையீட்டு வழக்குமுறையில் தொகுத்தளித்த உண்மைகளைச் சரிபார்க்க முழு தகுதி பெற்றவன்.

2. நான் ............ இந்த நாளில் ................ என்ற இடத்தில்
   - (i) எனது அறிவுப்புலத்துக்கெட்டிய வரையில் மேலுள்ள மேல்முறையீட்டு வழக்குமுறையில் உள்ள உள்ளடக்கங்கள் உண்மையென்றும் அதில் உள்ள எந்தவொரு பகுதியும் பொய்யானதில்லையென்றும் அவற்றூடாக எந்தவிதத் தகவலும் மறைக்கப்படவில்லையென்றும்.
   - (ii) மேல்முறையீட்டு வழக்குமுறையில் ............... பத்திகளில் அமைந்த கூற்றுகள் எல்லாம் எனக்குக் காட்டப்பட்டன அதில் ’அ’ என்ற எழுத்தால் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட அனைத்தும் எனது அறிவுக்குப் புலப்பட்டவரையில் உண்மையானவையென்றும்.
   - (iii) அதில் ’ஆ’ என்ற எழுத்தால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள ............... பத்திகளில் உள்ள கூற்றுக்கள் அனைத்தும் ................ என்பதன் வழியே பெறப்பட்டவையென்றும், எனவே அவை உண்மை வாய்ந்தவையென நம்புகிறேன் என்றும்

உண்மை வாய்ந்த அறநிலையோடு உறுதிப் படுத்துகிறேன்
என் முன்னிலையில் இனங்காட்டப்பட்டவை

மேல்முறையீட்டாளர்
கையொப்பம்.

### குறுக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கே.வ. (DD) | : | கேட்பு வரைவு |
| 2. | ப.தி. (HP) | | பரிதிறன் |
| 3. | இ.செ.அ. (ISI) | : | இந்தியச் செந்தர அமைவனம் |
| 4. | கி.வோ.ஆ. (KVA) | : | கிலோ வோல்ட் ஆம்பியர் |
| 5. | கி.வா. (KW) | : | கிலோ வாட் |
| 6. | து.மி..ப.மை. (SLDC) | : | துணைமின் சுமைப்பகுப்புமையம் |

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா. பாலசுப்பிரமணியன்**
**செயலாளர்.**